பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 09, வெள்ளிக்கிழமை 25.08.2017 கதிர் 292

## உயர்தரப் பொது அறிவுப் பரீட்சை 2ஆம் திகதியல்ல: 3ஆம் திகதியே!


### ஹஜ் பெருநாளை ஒட்டி மாற்றம்

கொழும்பு, ஓக. 25
எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி இடம்பெறவிருந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பொது அறிவு பாடத்துக்கான பரீட்சையை அடுத்த நாள் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்கு, கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது என, கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். பக்கம் 18

# ரெலோவின் சுயமரியாதைக்கு முதல்வரின் முடிவு பெரும் சவால்



## எதிர்கொள்ளத் தயார் என அக்கட்சி அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 25
ரெலோ பரிந்துரைத்த உறுப்பினரை விடுத்து அக்கட்சியின் பிறிதொருவருக்கு அமைச்சர் பதவியை வழங்கி, கட்சித் தீர்மானத்தையும் கட்டுப்பாட்டையும் மீறி அவரை அமைச்சுப் பத வியை ஏற்கவைத்த முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயற்பாடு, ரெலோவுக்கு விடுக்கப்பட்டுள்ள பெரும் சவால் என்று குறிப்பிட்டுள்ள அக்கட்சியின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா, அந்தச் சவாலை எதிர்கொள்வதற்குத் தமது கட்சி தயார் என்றும் அறிவித்திருக்கின்றார்.

இத்தகைய முடிவை முதலமைச்சர் தனித்து சுயமாக எடுத்திருப்பார் என்று தாங்கள் நம்பவில்லை எனக் கூறிய அவர், பிற தலையீடுகளே இதன் பின்னணி என்பது தங்களுக்குத் தெரியும் என்றும் சொன்னார். பக்கம் 18

## ஐ.நாவுக்கு அனுப்பிய கடிதத்தை கூட்டமைப்பு வெளிப்படுத்தவேண்டும்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம்,ஓக.25
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைத்த கடிதம் தொடர்பாக தெற்கு ஆங்கில ஊடகங்களும் வடக்கு தமிழ் ஊடகங்களும் வெளியிட்டுள்ள செய்திகளில் முரண்பாடுகள் உள்ளன. இதனால், கூட்டமைப்பு அந்தக் கடிதத்தைப் பகிரங்கப்படுத்த வேண்டும்."

- இவ்வாறு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். கந்தர்மடத்தில் பக்கம் 18

## வழக்கிற்கு எஸ்.பி. வராததால் 10 வருடங்கள் எதிரி சிறையில்!

### பொலிஸ் அதிகாரிக்குப் பிடியாணை

கொழும்பு,ஓக.25
தொடர்ந்து 10 வருடங்களாக வழக்கு விசாரணைக்கு சம்பந்தப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் சமுகம் தராமல் தவிர்த்து வருகின்றமையால் எதிரி வீணே சிறையில் வாடும் அவல நிலை நீடித்திருக்கின்றது.

எதிரி தரப்பின் சிரேஷ்ட சட்டத் தரணி கே.வி.தவராசா இந்த விடயம் குறித்து நீதிமன்றில் கடும் ஆட்சேபனை வெளியிட்டமையை அடுத்து சம்பந்தப்பட்ட எஸ்.பியை கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

பயங்கரவாதத் தடுப்புச் பக்கம் 18

## 20ஆவது திருத்தத்துக்கு முதல்வர் விக்கியும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம்,ஓக.25
அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு வடமாகாண சபை ஆதரவளிக்காது என முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கோடி காட்டியிருக்கின்றார்.

மாகாண சபை வளாகத்தில் வைத்து நேற்று ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தத் திருத்தமானது பக்கம் 18

## பேரறிவாளன் 1 மாத பரோலில் விடுவிப்பு!



சென்னை,ஓக.25
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 26 ஆண்டுகளாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள பேரறிவாளனை ஒருமாதம் பரோலில் செல்ல அனுமதிக்கும்படி தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதற்கான அரசாணை தற்போது பக்கம் 18

### தாஜுதீனின் சடலத்தைப் பரிசோதித்த

## முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி கைது செய்யப்படும் சாத்தியம்!

கொழும்பு, ஓக.25
றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் மரணம் சம்பந்தமாக நடத்தப்பட்ட முதலாவது பிரேத பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட உடற்கூறுகள் காணாமற்போன சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ள முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி பேராசிரியர் ஆனந்த சமரசேகரவை அதற்காக கைது செய்யமுடியும் என சட்டமா அதிபர் நேற்று நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பான வழக்கு கொழும்பு ' பக்கம் 18

## ஊவா மாகாண சபையிலும் 20ஆவது திருத்தம் தோல்வி

கொழும்பு,ஓக.25
நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவு ஊவா மாகாணசபையில் நேற்று தோற்கடிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கும் வகையிலும், அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தும் வகையிலும், 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவை நல்லாட்சி அரசு முன்வைத்துள்ளது. பக்கம் 18

## உள்ளூராட்சி தேர்தல் சட்டம்: இன்று வாக்கெடுப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான திருத்தச் சட்ட மூலத்தின் மீது இன்று நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு இன்று காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இச்சட்ட மூலம் தொடர்பிலான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சுன்னாகத்தில் ரயில் மோதி இளம் குடும்பஸ்தர் பலி!

### தற்கொலை எனச் சந்தேகம்

சுன்னாகம், ஓக.25
சுன்னாகம் ரயில் பாதையில் நின்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று ரயில் மோதிப் பலியானார். சாந்தை பண்டத்தரிப்பைச் சேர்ந்த சரவணை இராமச் சந்திரன் (வயது-37) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே பலியானவராவார்.

நேற்று பிற்பகல் காங்கேசன் துறையில் இருந்து பக்கம் 18

## விஜயதாஸவின் இடத்துக்கு காமினி ஜயவிக்ரம




நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்குத் தற்போதைய நிலையான அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா இன்று பதவிப் பிரமாணம் செய்து கொள்ள உள்ளார் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (உ)

## உணவகங்கள் இரண்டுக்கு 'சீல்'!

யாழ்ப்பாணம்,ஓக.25
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள இரு உணவகங்களும் யாழ். சிறுவர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சீல்வைக்கப்பட்டுள்ளன.

யாழ். குருநகரில் அமைந்துள்ள சிறுவர் நீதிவான் நீதிமன்றக் கட்டளையின் பக்கம் 18




## பண்ணையில் படகு கவிழ்ந்ததில் ஒருவர் பலி; ஒருவரைக் காணோம்

### இருவர் காப்பாற்றப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஓக.25
குருசுத்தீவில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்கு படகு ஒன்றில் புறப்பட்டுச் சென்ற நால்வர் படகு கவிழ்ந்ததில் கடலுக்குள் வீழ்ந்தனர்.

அவர்களில் ஒருவர் பலியானார்; மற்றொருவரைக் காணவில்லை. இருவர் மீட்கப்பட்டுள்ளனர். பக்கம் 18

# மூன்றரைக் கோடி ரூபா செலவில் முல்லைத்தீவுக்கு நெற்களஞ்சியம்!

இழுபறி நிலையில் காணப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நெற்களஞ்சியம் அமைக்கும் விவகாரத்திற்கு தற்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நெற்களஞ்சியம் அமைக்கும் பணிகள் நாளை ஒட்டுச்சுட்டானில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2015ஆம் ஆண்டில் முல்லைத்தீவில் நெற்களஞ்சியம் அமைப்பதற்காக சுமார் மூன்றரைக் கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், அதிகாரிகள் நெற்களஞ்சியம் அமைப்பதற்கு உகந்த இடத்தைத் தெரிவு செய்வதில் காட்டிய அசமந்தம் காரணமாக அந்த நிதி மீண்டும் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக தமது நீண்டகால கோரிக்கை நிறைவேறும் என எதிர்பார்த்திருந்த விவசாயிகள் பெரும் ஏமாற்றமடைந்தனர்.

இவ்வாறான நிலையில் நாளை நெற்களஞ்சியத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஒட்டுச்சுட்டானில் இடம்பெறவுள்ளது.

இந்த நெற்களஞ்சியத்தை மிகப்பெரியளவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான நிலமும் தெரிவு செய்யப்பட்டு, நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபையின் ஊடாக கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒட்டுசுட்டான், வித்தியாபுரம் பகுதியில் அமைக்கப்படவுள்ள இந்த நெற்களஞ்சியத்தின் கட்டுமானப்பணிகள் அடுத்த வருடம் நடுப்பகுதிக்குள் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நகைகளைச் சூறையாடியவர் வவுனியாவில் கைது!

வவுனியா, ஓக. 25

வவுனியாவில் பல பிரதேசங்களில் வீதியில் செல்லும் பெண்களின் நகைகளை வழிப்பறி செய்த நபரை நேற்றுமுன்தினம் வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியாவில் ஆசிகுளம், கோவில்குளம், பட்டைகாடு போன்ற பல்வேறு பகுதிகளில் பகல் நேரத்தில் வீதியில் செல்லும் பெண்களின் தங்கச்சங்கிலி, தாலிக்கொடி போன்றவற்றை குறிவைத்து தங்கநகைகளை சூறையாடிய நபரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மகாறம்பைக்குளம் பகுதியை சேர்ந்த யோகலிங்கம் தர்சன் (வயது 26) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட மற்றொரு நபரைத் தாங்கள் தேடிவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் சூட்சுமமான விசாரணை முறையால் இந்த நகைகளைவிற்பனைசெய்தஇடத்திலும், அடகு வைத்த இடத்திலுமாக மொத்தம் நான்கு லட்சம் பெறுமதியான நகைகளை பொலிஸார் மீட்டுள்ள னர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமாரவின் வழிகாட்டலின் கீழ் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பியஸ்ரீ பெர்னாண்டோ, மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் பூரளகெதர, பொலிஸ் சார்ஜண்ட் ஜேசுதாசன் தலைமையிலான குழுவினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர்சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த தாங்கள் நடவடிக்கைமேற்கொண்டு வருகின்றார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (க-100)

## தேசியப் பாதுகாப்புக்கு சவால் ஏதும் இல்லை!

### பாதுகாப்புப் பிரதானி தெரிவிப்பு

கண்டி, ஓக. 25

இலங்கையில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எந்த வகையான சவால்களும் இதுவரை ஏற்படவில்லை என்று பாது காப்பு படைப் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ண திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து பாதுகாப்பு பிரிவினருக்கு தெரியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைகடற்படை தளபதியாக இருந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ண, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பதவி உயர்வு வழங்கப்பட்டு பாதுகாப்புப் படை பிரதானியாக கடந்த வாரம் நியமிக்கப்பட்டார்.

இதற்கமைய கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டார்.



இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்ற பாதுகாப்பு படைத்தளபதி அட்மிரல் ரவீந்திரவிஜேகுணரட்ண, நேற்றைய தினம் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் செய்து சமய வழிபாடுகளில்கலந்துகொண்டமையோடு மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசியும் பெற்றுக்கொண்டார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அட்மிரல் ரவீந்திரவிஜேகுணரட்ண மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை இருந்தால் அதுகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார், முப்படைகள், விசேட அதிரடிப் படையினர் உள்ளனர். அவர்கள் தத்தமது கடமைகளைச் செய்வர்.

நானும், அதேபோல புதிதாக நியமிக்கப்பட்ட கடற்படைத் தளபதி மற்றும் விமானப்படைத் தளபதி, இராணுவத் தளபதி ஆகியோர் விசேடமாக யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் படைக்கு இணைந்தோம்.

கடந்த 1980களில் யுத்தம் இருக்கவில்லை. எனினும் எமது காலத்தில் யுத்தம் செய்து, ஓய்வு பெறுவதற்கு முன்னர் அதனை முடிவுக்கும் கொண்டுவந்தோம்.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டால் அதற்கு செய்ய வேண்டிய பதில் நடவடிக்கையும் அவர்களுக்குத் தெரியும். தேசிய பாதுகாப்பு குறித்து எந்த அச்சுறுத்தலும் இல்லை. - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோதமாக முதிரை மரக்குற்றிகளை கொண்டு செல்ல முயற்சித்தவருக்கு தண்டம்!

வவனியா, ஓக. 25

கிளிநொச்சியில் சட்டவிரோதமான முறையில் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளைக் கொண்டு செல்ல முயற்சித்த நபருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தச் சந்தேக நபருக்கு 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - பளைப் பகுதியில் ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 562 ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை சட்டவிரோதமாக ஏற்றிச்சென்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது, அவருக்கு பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுவழக்கிற்கு தவணையிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வழக்கின் தவணையை முன்னிட்டு அவர் நீதிமன்றில் ஆஜராகிய போது அவர் குற்றத்தை ஏற்றுக் கொண்ட நிலையில் 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

## கேப்பாபிலவு தொடர் போராட்டத்துக்கு அம்பாறை மாவட்ட உறவுகள் ஆதரவு!

வவுனியா, ஓக. 25

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பூர்வீகக் கிராமத்திலுள்ள பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதற்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யாகிபோனநிலையில் நேற்று 177 ஆவது நாளாகவும் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தின் வசமுள்ள தமது பூர்வீக காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் முன்னெடுக்கும் மக்கள் போராட்டம் நேற்று 177 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்தவகையில் நேற்று முன்தினம் 176 ஆவது நாள் போராட்டத்தில் அம்பாறை மாவட்ட மக்கள் வருகை தந்து இவர்களின் போராட்டத்துக்கு தமது ஆதரவை வழங்கியமையோடு நல்லாட்சி அரசு இவர்களுக்கு உடனடியாக தீர்வை வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமானச் செல்வம் அடைக்கலநாதனின் ஒழுங்கு படுத்தலில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கேப்பாபிலவு மக்கள் பிரதிநிதிகள் சிலர் சந்தித்துக் கலந்துரையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.



(க-81)

காலைக்கதிர்
Kalaikkathir



# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்றும் மாணவர்கள் முறுகல்

## பொலிஸ் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள்

மட்டக்களப்பு, ஓக.25

மட்டக்களப்பு – வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டது எனத் தெரியவருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை அனைத்து மாணவர்களையும் வெளியேறுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று மாலை வரை வெளியேறாமல் பல்கலைக்கழக நிர்வாக கட்டடத்தொகுதியில் குறிப்பிட்ட சில மாணவர்கள் தங்கியிருந்தனர்.

மாணவர்களுக்கும் காவலாளிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தில் தங்கி நிற்கும் மாணவர்களில் ஒருவர் சுகயீனமுற்ற நிலையில் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்காக ஓட்டோவை பல்கலைக்கழக வளாகத்திற்குள் கொண்டு செல்ல முற்பட்டபோதே மாணவர்களுக்கும் காவலாளிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# புத்தரை அவமதித்த குற்றச்சாட்டு: கைதான இளைஞன் விடுதலை

புத்தரை அவமதிக்கின்ற வகையில் சில வாசகங்களைப் பதிவேற்றம் செய்தார் என்ற குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் இளைஞர் நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞன் 88 நாள்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். குறித்த இளைஞன் மீதான வழக்கை தண்டனை சட்டக்கோவை 291 இன் கீழ் மீள் பதிவு செய்ததைத் தொடர்ந்து அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) கீழ் கடுகன்னாவை பொலிஸாரால் குறித்த இளைஞனுக்கு எதிராக பிழையான முறையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்ததாக அவர் சார்பில் ஆஜரான RRT அமைப்பு தெரிவித்துள்ளது. (ம)

# ஆசிரியர்களுக்கான கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஓக.25

ஆசிரியர்களுக்கான புலமைசார் பட்டயக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறியை வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆரிய பாஷாபிவிருத்திச்சங்கம் கல்வியங்காட்டில் உள்ள கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் நடத்தவுள்ளது.

விடுமுறை தினங்களிலும் வார இறுதி நாள்களிலும் பிற்பகல் 2.00 மணிக்கு வகுப்புக்கள் நடைபெறும். 1000 மணித்தியாலங்களைக் கொண்ட இக் கற்கை நெறி முடிவில் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மூலம் சான்றிதழும் வழங்கப்படும்.

ஆர்வமுடைய ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன், சிந்துபுரம், வட்டுக்கோட்டை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 0776913333 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# தமிழ் இராணுவத்தினர் இருவர் காயத்துடன் வைத்தியசாலையில்

தமிழ் இராணுவத்தினர் இருவர் வெட்டுக் காயங்களுடன் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்றிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி இரு இராணுவத்தினரும் ஊற்றுப்புலத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களுக்கு இடது பக்க கைகளில் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை. (ம)

# ராஜிதவுக்கு எதிரான பிரேரணையில் மஹிந்த கையொப்பம் இடவில்லை

கொழும்பு, ஓக.25

கூட்டு எதிர்க்கட்சியினரால் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை 39 உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சபாநாயகர் கருஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்தப் பிரேரணையில் கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும், முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ கையொப்பம் இடவில்லை.

அரசாங்கத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியை விட குறைந்த விலையில் மோதர மீன்பிடி துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கியமை உள்ளிட்ட 11 குற்றச்சாட்டுக்கள் அமைச்சர் ராஜிதவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(மற்றொரு செய்தி 05ஆம் பக்கத்தில்)

# ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள்: வளர்ப்பதில் சிரமம், உதவி கோரல்



தியத்தலாவ வைத்தியசாலையில் தாய் ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள் பிறந்துள்ளன. நேற்றுமுன்தினம் மாலை இந்த குழந்தைகள் பிறந்தன என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

மூன்றும் பெண் குழந்தைகள் எனவும் அவை ஆரோக்கிய மானநிலையில் உள்ளன எனவும் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லக்ஷான் தனஞ்சய (வயது– 23) – சந்திரிகா தர்ஷினி (வயது– 21) தம்பதியருக்கே இந்தக் குழந்தைகள் பிறந்தன.

ஏழ்மையான இளம் குடும்பத்தினர் இவர்கள். மூன்று பிள்ளைகளையும் வளர்ப்பதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். இதனால், குழந்தைகளை வளர்ப்பதற்கு அவர்கள் உதவியை எதிர்பார்த்துள்ளனர் என வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

# ஓட்டோ – துவிச்சக்கரவண்டி வேப்பங்குளத்தில் விபத்து

வவுனியா, ஓக.25

வவுனியா – வேப்பங்குளம் பகுதியில் நேற்றிரவு 7.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். அவர்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

வவுனியாவிலிருந்து மன்னார் வீதியூடாக பயணித்த துவிச்சக்கரவண்டியை வேப்பங்குளம் சமுர்த்தி வங்கிக்கு அருகே அதே பாதையில் பயணித்த ஓட்டோ பின்புறத்தில் மோதித்தள்ளியது. இந்த விபத்தில் ஓட்டோ சாரதியும் துவிச்சரவண்டியைச் செலுத்திச் சென்ற முதியவரும் காயமடைந்தனர். இச் சம்பவம் தொடர்பாக வவுனியா மற்றும் நெளுக்குளம் போக்கு வரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# 2ஆவது ஒரு நாள் ஆட்டத்தில் போராடி வென்றது இந்தியா!

கண்டி, ஓக. 25



இலங்கைக்கு எதிராக நேற்று கண்டியில் நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்திலும் – மிகக் கடுமையாகப் போராடி – வென்றது இந்தியா.

பதினாறு பந்துகள் எஞ்சியிருக்கையில் மூன்று விக்கெட் வித்தியாசத்தில் வெல்வதற்கு மகேந்திரசிங் டோனி, புவனேஸ் குமார் ஜோடியின் பிரிக்க முடியாத துடுப்பாட்டம் பேருதவி புரிந்தது.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இந்தியா, களத்தடுப்பை முதலில் தெரிவு செய்தது.

பகல் இரவாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, வழங்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 236 ஓட்டங்களைப் பெற்றது. டிக்வெல்ல 31, சிறிவர்தன 58, கபுகெதர 40 ஓட்டங்களைப் பெற்றனர். ஜஸ் பிர் சிங் பும்ரா 43 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடுவதற்கு இந்தியா ஆரம்பித்த சமயம் மழை குறுக்கிட்டது. இதனால் ஏற்பட்ட தாமதத்தைச் சமாளிப்பதற்காக ஓட்ட இலக்கு மீளக் கணக்கிடப்பட்டது.

அதன்படி 47 ஓவர்களில் 231 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற இலக்கு இந்தியாவுக்கு விதிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இந்திய விக்கெட்டுகள் மளமளவென்று சரிந்தன. ஒரு கட்டத்தில் 21.5 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 131 ஓட்டங்கள் என்ற மிக மோசமான பின்னடைவு நிலையில் இந்தியா நின்றது.

வெற்றிக்கு சரியாக நூறு ஓட்டங்கள் பின்தங்கி நின்ற இந்திய அணியை வெற்றிப் பாதைக்குப் பாதுகாப்பாகக் கொண்டு சென்றது டோனி – குமார் ஜோடி.

இருவரும் ஜோடி சேர்ந்து வெற்றிக்குத் தேவையான அந்த நூறு ஓட்டங்களையும் குவித்தனர். டோனி 45, குமார் 53 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்று வெற்றியை உறுதி செய்தனர்.

இலங்கை தரப்பில் 10 ஓவர்கள் பந்து வீசி 54 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்திய அகில தனஞ்செய ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

ஐந்து ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட இத் தொடரில் இந்தியா 2–0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. (உ)

## ரெலோ...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைக்காக இந்திய செல்கிறேன். செல்ல முன்னரே கட்சித் தலைமைக் குழுவைக் கூட்டுவதற்கான ஒழுங்குகளைச் செய்துவிட்டே செல்கிறேன். இரண்டு வாரத்தில் வருவேன். வந்ததும் தலைமைக் குழு கூடும். ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்தது, சுகாதார அமைச்சை நிர்வகிப்பதற்கு ஒரு மருத்துவர்தான் அவசியம் என்ற முதல்வரின் விளக்கம் அர்த்தமற்றது; அடிப்படையற்றது. அதற்கு ஒரு சிறந்த நிர்வாகிதான் அவசியமே அன்றி மருத்துவர் அல்லர்.

ஒவ்வொரு அமைச்சுக்கும் அந்தந்த துறைசார் நிபுணர்தான் அமைச்சராக வரமுடியும் என்ற முதல்வரின் வாதம் – எதிர்பார்ப்பு – ஏற்புடையதேயல்ல.

இந்த நாட்டின் ஜனாதிபதியும் நிமால் சிறிபால டி சில்வாவும் மருத்துவர்கள் அல்லர். ஆனால் அவர்கள் நாட்டின் சுகாதார அமைச்சர்களாக நீண்டகாலம் பதவி வகித்துள்ளனர்.

நாம் பரிந்துரைத்த விந்தனுக்கு உரிய அமைச்சை வழங்காமல் முதல்வர் நிராகரித்தமைக்கு அவர் மீது பிரயோகிக்கப்பட்ட புற அழுத்தங்கள்தாம் காரணம் என்பது எமக்கு தெரியும். ஆனால் இத்தகைய அழுத்தங்களுக்கு முதல்வர் அடிபணிந்திருக்கக் கூடாது என்பதுதான் எமது கருத்து.

எமது கட்சிக்கும் – ரெலோவுக்கும் – சுயமரியாதை உண்டு. அதனை எப்படிப் பேணுவது என்பது எமக்குத் தெரியும். அதை முதல்வர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மக்கள் செல்வாக்குப் பற்றியும் முதல்வர் பேசுகின்றார். கடந்த மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டம் முழுவதிலும் அவருக்கே அதிக எண்ணிக்கையான விருப்பு வாக்குகள் கிடைத்தன. ஆனால் ஊர்காவற்றுறைத் தொகுதியில் மட்டும் அவரை விட அதிக விருப்பு வாக்குகளை விந்தன் பெற்றிருந்தார்.

விந்தனைப் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிப்பவர் போலக் காட்டிக் கொண்டே அவரை நாசூக்காக நிராகரித்துப் புறம் தள்ளியிருக்கின்றார் முதல்வர் – என்றார் ஸ்ரீகாந்தா. (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கடற்படைத் தளபதியின் கருத்து

இலங்கையின் 21 ஆவது கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள தமிழரான வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா, பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் முதல்தடவையாக ஊடகவியலாளர்களைச் சந்தித்திருக்கின்றார்.

வழமைபோல, இலங்கைப் படைகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் - குறிப்பாக மனித உரிமை மீறல், ஆள் கடத்தல், சித்திரவதை செய்தல், காணாமற்போகச் செய்தல், படுகொலைக் குற்றச்சாட்டுக்கள் - குறித்து அவரிடமும் கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டுள்ளன.

யுத்த காலத்திலும், யுத்தத்தின் முடிவின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலும் படைத் தளபதிகள் இத்தகைய கேள்விகளுக்கு அளிக்கும் பதில்களைவிட சற்று வித்தியாசமான பதிலை ட்ரவிஸ் சின்னையா வெளியிட்டிருக்கின்றார்.

அவர் தமிழர் என்பதால் அப்படிப் பதிலளித்தார் என்பதல்ல. மஹிந்த ஆட்சி கவிழ்ந்து - 'நல்லாட்சி' அரசு பதவியேற்றபின்னர் - பொறுப்புக்கு வந்த அநேகமான தளபதிகள் கூறும் பதிலைத்தான் ட்ரவிஸ் சின்னையாவும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

மஹிந்த ஆட்சிக் காலத்தில், யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், அவரது சகோதரரும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ, யுத்தத்தில் ஒரு சிவிலியன் கூடக் கொல்லப்படவேயில்லை என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோலக் கதைவிட்டார்.

அந்தக் கதையை உலகமும் ஏற்றுக்கொண்டது. யுத்தம் முடிந்த கையோடு, யுத்த வேளையில் இலங்கைப் படைகள் நடந்துகொண்ட முறைமை குறித்துக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஜெனீவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டுவரப்பட்ட பிரேரணை அங்கு தலைகீழாக மாற்றப்பட்டது. புலிகளைத் தோற்கடித்து, ஜனநாயகத்தை நிலைநாட்டிய மஹிந்த ராஜபக்ஷ அரசைப் பாராட்டும் தீர்மானம் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்டது.

அப்போது முதல் தற்போதைய நல்லாட்சி அரசு ஏற்படும் வரை படைத் தளபதிகள் மட்டுமல்லர், தென்னிலங்கையின் அனைத்துத் தலைவர்களும் இங்கு யுத்தக் குற்றம் நடக்கவில்லை, மனித உரிமை மீறல்களோ, ஆள் கடத்தல்களோ, மனித நேயத்துக்கு எதிரான செயல்களோ, இனவழிப்போ இடம்பெறவேயில்லை என்றே சாதித்து வந்தனர்.

நல்லாட்சி அரசின் தோற்றத்தோடு அந்த விளக்கத்தில் கொஞ்சம் சுருதி மாறியிருக்கின்றது. அவ்வளவே.

முன்னர் இறுதி யுத்தத்தின்போது யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல் நடக்கவேயில்லை என்று சாதித்த தரப்புகள், இப்போது, அப்படி நடந்திருந்தால் அவற்றை இழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று தங்கள் கூற்றைச் சற்று மாற்றிப் போட்டிருக்கின்றார்கள்.

அதையே அண்மையில் புதிதாகப் பதவியேற்ற இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க கூறினார். அதையே புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் கடற்படைத் தளபதியான ட்ரவிஸ் சின்னையா கூறியிருக்கின்றார்.

"குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரை எல்லோரும் அப்பாவிகளாகத்தான் கருதப்படவேண்டும். எவரையும் நாங்கள் எங்கள் பாட்டில் நியாயம் தீர்க்க முடியாது. உரிய விசாரணைகள் நடத்தும் போது உண்மை வெளிவரும்". - என்றார் ட்ரவிஸ் சின்னையா.

"சிப்பாய் ஒருவர் கொலைஞராக இருக்கமுடியாது. கொலைஞர் ஒருவர் சிப்பாயாக இருக்கமுடியாது. குற்றவாளியாக நீங்கள் காணப்பட்டால் - அல்லது குற்றத்தை நீங்கள் செய்திருந்தால் - அதற்கு மன்னிப்பே கிடையாது". - என்று புதிய தளபதி கூறுகின்றமை வாஸ்தவம்தான்.

ஆனால், அவர் அதில் சொல்ல மறந்தவிடயம் ஒன்று இருக்கின்றது. அதைச் சுட்டிக்காட்டுவதுதான் எமது கருத்து.

"எமக்கு ஒரு நீதிமன்ற முறைமை இருக்கின்றது. அதேபோல ஒரு கடற்படைச் சட்டமும் இருக்கின்றது. கடற்படை நீதிமன்றத்தில் அல்லது சிவில் நீதிமன்றில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் நிச்சயம் தண்டனை வழங்கப்படும்" - என்று புதிய தளபதி கூறுகின்றமையில் தான் விடயம் உள்ளது.

யுத்தக் குற்றவாளிகளால் ஆயிரம், ஆயிரம் உறவுகளைப் பறிகொடுத்த - பல்லாயிரம் பொதுமக்களின் கொடூரகாயங்களை எதிர்கொண்ட - பெருமளவு சொத்துக்களை இழந்த - துன்ப, துயரங்கள், இன்னல்களை அனுபவித்த - தமிழர் சமூகத்துக்கு கடற்படைத் தளபதி குறிப்பிட்ட இரண்டு நீதிமுறைமைகளிலுமே நம்பிக்கை இல்லை.

இலங்கையில், உள்நாட்டு சிவில் நீதிமன்றங்கள் மூலமோ படைத்தரப்பு நீதிமன்றங்கள் மூலமோ தமக்கு நீதி கிடைக்கும், நியாயம் நிலைநாட்டப்படும் என்றோ நம்புவதற்கு தமிழர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்லர். அவர்களது பட்டறிவு அந்த நிலைப்பாட்டைத்தான் அவர்களுக்குத் தந்திருக்கின்றது.

"விசாரணைகளில் குற்றவாளிகளாகக் காணப்படுவோர் தண்டிக்கப்படுவர்" என்று புதிய கடற்படைத் தளபதி கூறுவதற்குப் பதிலாக, "நீதி நேர்மையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும். அதில் குற்றவாளிகளாகக் காணப்படுவோர் நிச்சயம் தண்டிக்கப்படுவர்" - எனக் கூறியிருந்தால் அதனை வரவேற்று இருக்க முடியும்.

# பூநகரியில் மணல் கொள்ளை; தடுத்து நிறுத்தினார் அங்கஜன்!



மன்னார், ஓக. 25

இனந்தெரியாதவர்களால் பூநகரி - கௌதாரிமுனை பகுதியில் இடம்பெற இருந்த பெரும் மணல் கொள்ளை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனது நேரடி தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் அபிவிருத்தித் திட்டத்திற்கு மணல் வழங்காது மன்னார் பகுதியைச் சேர்ந்த தனிநபர் ஒருவருக்கு மணலை அகழ்வதற்கான அனுமதி முறையற்ற ரீதியில் அரச அதிகாரிகளால் வழங்கப்பட்டு கடந்த வெவ்வாய்க்கிழமை இரவு நேரத்தில் மணல் அகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த செயற்பாடு தொடர்பாக கிராம மக்களால் பொருத்தமான அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரியிடம் தெரியப்படுத்தப்பட்ட போதும் அதனை தடுத்து நிறுத்துவதற்காக எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதியில் மக்களால் இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அவர் அவ்விடத்திற்கு உடனே சென்று மணல் அகழ்வை தடுத்து நிறுத்தியுள்ளார்.

அத்துடன் அவர் இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருடனும் தேவாலயத்திற்கு பொறுப்பானபோதகருடனும்பேச்சுக்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# கீதாவுக்கு மட்டுமே இரட்டைக் குடிரிமை!



கொழும்பு, ஓக. 25

நாடாளுமன்ற உறுப்பினர்களில் கீதா குமாரசிங்கவுக்கு மாத்திரமே இரட்டைக் குடியுரிமை இருக்கிறது என குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அறிவித்துள்ளார் என்று 'பவ்ரல்' அமைப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் யார் இரண்டு நாடுகளின் குடியுரிமைகளை கொண்டுள்ளனர் என்ற விடயம் கடந்த காலத்தில் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

இதன் உண்மை என்ன என்பதை அறிந்து கொள்ள தகவல் அறியும் சட்டத்தின் கீழ் 'பவ்ரல்' அமைப்பு, குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திடம் தகவல்களை கோரி விண்ணப்பம் செய்திருந்தது என 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

விண்ணப்பத்திற்கு பதிலளிக்கும் வகையில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் கூடிய பட்டியலை நாடாளுமன்ற செயலாளரிடம் இருந்து வரவழைத்து ஆராய்ந்துள்ளார்.

இதனடிப்படையில், காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கீதா சமன்மலி குமாரசிங்கவுக்கு மாத்திரம் 17096 என்ற இலக்கம் கொண்ட இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது எனக் கட்டுப்பாட்டாளர் அறிவித்துள்ளார்.

ஏனைய 224 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரட்டை குடியுரிமைகளை கொண்டிருக்கவில்லை எனதமக்குத் தெரியப்படுத்தப்பட்டது என ரோஹண ஹெட்டியராய்ச்சி குறிப்பிட்டுள்ளார் என்று 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# ஞானசார தேரருக்கு விசேட சட்டம் உள்ளது!

**மஹிந்த கூறுகிறார்**



கொழும்பு, ஓக. 24

வண.ஞானசார தேரருக்கு இந்த நாட்டில் விசேட சட்டம் உள்ளது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றில், வண.ஞானசார தேரர் நீதிமன்ற அனுமதியின்றி ஜப்பான் சென்றுள்ளமை தொடர்பில் பிரமுகர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் போது, கூட்டுஎதிரணியினர்வெளிநாடு செல்ல வேண்டும் என்றால் ஆயிரம் முறை நீதி மன்றத்திற்கு ஏறி இறங்க வேண்டும். ஆனால் வண.ஞானசார தேரருக்கு இந்த நாட்டில் விஷேட சட்டம் உள்ளது.

இந்த அரசில் வண. ஞானசார தேரருக்கு இராஜதந்திர அந்தஸ்து பெற்றுக்கொடுத்துள்ளது என்றும் மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவும் அங்கு விசனம் வெளியிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**கிராம உத்தியோகத்தர்கள் தெரிவு:**

# போட்டிப் பரீட்சையில் தெரிவானோருக்கு நேர்முகப் பரீட்சை விரைவில் நடக்கும்

கிராம உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 4 ஆயிரம் பேருக்கு விரைவில் நேர்முகப் பரீட்சை இடம் பெறவுள்ளது என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர எழுப்பிய கேள்விக்குபதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 815 கிராம உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன என்றும், கிராம உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு நடைமுறை பிற்போடப்படவில்லை என்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## நாளை

26.08.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : சித்திரை மாலை 6.41 வரை
திதி : பஞ்சமி மு.இ 11.28 வரை
சுபநேரம் : 3.05 – 4.35 வரை
இராகுகாலம் : 9.05 – 10.35 வரை

# வவுனியா பொலிஸ் நிலையக் காணித்துண்டை மீட்டுத்தர பிரதேச செயலாளருக்கு நகரசபை கடிதம்!

வவுனியா நகரசபையின் வினைத்திறனான சேவையை மேலும் மெருகுபடுத் துவதற்கு தற்போது பொலிஸ் நிலையம் அமைந்துள்ள நகர சபைக்கு சொந்தமான காணியை பெற்றுத்தாருங்கள் என வவுனியா நகரசபை செயலாளர் ஆர்.தயாபரனால் வவுனியா பிரதேச செயலாளர் மற்றும் வவுனியா மாவட்ட அரசஅதிபருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையின் முகாமைத்துவக்குழு கலந்துரையாடல், நகர அபிவிருத்தி அதிகாரசபை கலந்துரையாடல் என்பவற்றில் ஆராயப்பட்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்போது பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணித்துண்டு நகர சபை அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் ஆதனமாக விளங்குவதனால் அதனை பொலிஸ் நிலையத்திற்கு வழங்க முடியாத நிலையிலுள்ளது.

எனவே, இந்த காணித்துண்டை வவுனியா நகரசபையின் அபிவிருத்திக்காக பெற்றுத் தருமாறு நகரசபை செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத் தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச சபை செயலாளர் க.உதயராசா தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா நகரசபை செயலாளர் அனுப்பி வைத்த கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் நாங்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தற்போது பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியில் சிறிய துண்டு காணியே நகரசபைக்கு சொந்தமானது. அந்த காணியைப் பொலிஸாருக்கே வழங்குமாறு நகரசபை செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்த சமயத்தில் அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

அந்தக் காணித்துண்டை பொலிஸாரிடமிருந்து மீளப் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் என வவுனியா பிரதேச சபை செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

## ராஜிதவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

தயாராகிறது கூட்டு எதிரணி

கொழும்பு, ஓக. 25

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விரைவில் சபாநாயகர் கருஜயசூரியவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா கொழும்பு ஊடகமொன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஏழு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் டாக்டர் ராஜித சேனா ரத்னவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குத் தேவையான கையொப்பங்கள் நாடாளுமன்றில் வைத்து உறுப்பினர்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்டன.

அரசின் மதிப்பீட்டு விலையை விடவும் குறைந்த விலைக்கு முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்தை குத்தகைக்கு விடல், லஞ்சஊழல்மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவின் விசாரணைகளில் பிரசன்னமாகாமை உள்ளிட்ட ஏழு குற்றச் சாட்டுக்கள் சுகாதார அமைச்சருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன என்றும் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார். (உ)

# வட மாகாண புதிய அமைச்சருக்கு வவுனியாவில் சிறப்பான வரவேற்பு!







கொழும்பு, ஓக. 25

வட மாகாண சபையின் புதிய அமைச்சராக பதவியேற்ற புளொட் அமைப்பின் மாகாணசபை உறுப்பினர் கந்தையா சிவநேசனுக்கு வவுனியாவில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

அவர் நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டமையுடன், தனது அமைச்சுப் பொறுப்புக்களையும் உடனடியாகவே ஏற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அவர் வவுனியாவிற்கு வருகை தந்தால், கோவில் குளம் பகுதியில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நினைவில்லத்திற்குச் சென்று அங்கு அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது அங்கு கூடியிருந்த கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள், இளைஞர் அணியினர் அவரை வரவேற்று கௌரவித்தனர்.

இந்த நிகழ்வின்போது விவசாய, மீன்பிடி அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டம் போரால் மிகவும் பாதிக்கப் பட்ட பிரதேசம் என்ற அடிப் படையிலும், முதலமைச்சரின் முயற்சியாலும் எமக்கு ஓர் அமைச்சுப் பதவி கிடைத்திருக்கின்றது.

அந்த வகையில் முதலமைச்சர் எம்மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு எமதும் எமது மக்களின தும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மிகக்குறுகிய காலத்தில் இந்த அமைச்சின் மூலம் எவ்வாறு பணியாற்ற முடியுமோ அந்தளவிற்கு என்னால் முடிந்தளவு அதனைச் செய்து மக்களுக்காக பணியாற்றுவேன். - எனக் குறிப்பிட்டுள்ளார். (க)

# பிரதமரின் தேவைக்கு அமையவே தேசிய அரசு உருவாக்கப்பட்டது!

அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 25

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தேவைக்கு அமையவே தேசிய அரசு அமைக்கப்பட்டது என அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக் களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

100 நாள்கள் வேலைத்திட்டம் மற்றும் தேசிய அரசின் வேலைத் திட்டங்கள் அரசியல் லாபம் கருதிய வேலைத்திட்டங்கள் அல்ல.

நாட்டின் முக்கிய பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கில் மிகவும் சிரமப்பட்டு உருவாக்கிய வேலைத் திட்டம் இது.


தெற்காசியாவில் முதலாவது பரீட்சார்த்த முயற்சியாக இந்த தேசிய அரசு உருவாக்கப் பட்டது.

கட்சி ஒன்றை உருவாக்குவதை விட நாட்டை உருவாக்கி எடுப்பது சிரமமானது.

ஜனாதிபதியும் பிரதமரும் ஒரு நிலைப்பாட்டில் இருந்து வருகின்றனர். - எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே எதிர்கால அரசியல் கூட நவீன தொழில் நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்கிறது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் இராஜ தந்திரியாக செயற்பட்டு வருகிறார் எனவும் அமைச்சரவையின் இணைப் பேச்சாளரான அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்பற்ற ரயில் கடவை ஊழியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு!



பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் காவல் கடமைகளில் ஈடுபடுவோருக்கு மாதாந்தம் 22 ஆயிரத்து 500 ரூபாவை வழங்குவதென அரசு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உரையாற்றிய போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் சட்ட சிக்கல்கள் உள்ளன.

இத்தகைய 876 ரயில் கடவைகளுக்காக பெல் அன்ட் லைட் சமிக்ஞை தொகுதிகள் பொருத்தப் படவுள்ளன. இந்தப் பணி ஐந்து கட்டங் களாக நிறைவேற்றப்படும் என்றும். - அவர் கூறினார்.

## கிளிநொச்சி தமிழ்ப் பெண்ணுக்கு சிங்கள இளைஞனின் சிறுநீரகம்!

சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருந்த தமிழ் பெண்ணொருவருக்கு சிங்கள இளைஞர் ஒருவரின் சிறு நீரகம் பொருத்தப்பட்டுள்ளது.

விபத்தொன்றில் சிக்கி மூளைச் சாவு நிலையிலிருந்த 19 வயதான சிங்கள இளைஞர் ஒருவரின் சிறுநீரகம் மேற்படி பெண்ணுக்கு பொருத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சியை சேர்ந்த 46 வயதான தமிழ்ப் பெண்ணுக்கு சிறுநீரகம் மாற்றீடு செய்யப்பட்ட சம்பவமொன்று கண்டி வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை நடந்தது.

பதுளை,மஹியங்கனை வீதியைச் சேர்ந்த வை. கே. லக்சன் புரமோத்யா எனும் இந்த இளைஞர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த வீதி விபத்தொன்றில் சிக்கிக் கொண்டார். அவர் மூளைச் சாவு நிலையிலுள்ளார். இந்த நிலையில், அவரது பெற்றோரின் சம்மதத்துடன் அகற்றப்பட்ட சிறுநீரகங்களில் ஒன்று தமிழ்ப் பெண்ணுக்கும் மற்றைய சிறுநீரகம் குருநாகல் மல்சிரிபுர பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது ஆணுக்கும் வெற்றிகரமாகப் பொருத்தப் பட்டன.

# மட்டு.வாகரை மயான பிரச்சினைக்குத் தீர்வு!

மட்டக்களப்பு, ஒக. 25
மட்டக்களப்பில் நீண்ட கால மாக இருந்து வந்த மயானப் பிரச்சினை ஆளுநரின் கவனத் துக்குக் கொண்டு சென்றதின் பிரகாரம் அதற்கு விரைவான தீர்வு கிட்டி யுள்ளது என தேசிய சமாதானப் பேரவையின் மட் டக்களப்பு மாவட்ட சர்வ மதப் பேரவைக் கான இணைப்பாளர் இராசையா மனோகரன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக நேற்று கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாகரையில் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ சபைப் பிரிவுகளைப் பின்பற்றுவோரின் சடலங்களை அடக்கம் செய்வ தற்கு மயானம் இல்லாததால் நீண்ட காலமாக இருந்து வந்த சர்ச்சை, ஆளுநரின் கவனத் துக்குக் கொண்டு சென்றதின் பிரகாரம் விரைவான தீர்வு கிட்டியுள்ளது.

கத்தோலிக்கரல்லாத கிறிஸ் தவ சபைகளைச் சேர்ந்த பிரி வினருக்கென தனியான மயா னம் இல்லாததால் அவர்கள் மரணிக்கும் தங்களது உறவி னர்களின்சடலங்களைஅடக்கம் செய்வதில் பல்வேறு மனித உரிமை மீறல் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவித்து இந்த விடயத்தை மாவட்ட சர்வ மதப் பேரவை யின் கவனத்துக்கு அவர்கள் கொண்டு வந்திருந்தனர்.

குறிப்பாக மட்டக்களப்பு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் இந்த பிரச்சினை நெருக் கடியைத் தோற்றுவித்து முரண் பாடுகள் உருவாகு வதற்கு காரணமாய் அமைந்து விட்டிருப் பதாகவும் அவர்கள் கவலை தெரிவித்திருந்தனர்.

கிராமங்கள் தோறும் உள்ள பொது மயானங்களில் தமது கத்தோலிக்கரல்லாத மதப் பிரி வைப் பின்பற்றும் நபர்களது உடல்களை அடக்கம் செய்ய விடாமல் தடுக்கப்படுவதால், அந்தப் பிரதேச செயலகத்தைத் தவிர்த்து வேறொரு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் அவர் கள் உடல்களை எடுத்துச் சென்று இறுதிக் கிரியைகளை நிறை வேற்ற வேண்டியுள்ளது.

இது தமக்கு மானசீகமான பல்வேறு உடல், உள ரீதியான தாக்கங்களையும், பொருளாதார



இழப்புக்களையும் மனித உரி மைகள் பற்றிய கேள்விகளை யும் எழுப்பியுள்ளமையால் இந்த பிரச்சினைக்கு நீதி பெற்றுத் தரவேண்டும் என்று பாதிக்கப் படுவோர், மாவட்ட சர்வமதப் பேரவையிடம் கேட்டிருந்தனர்.

இதுபற்றி சர்வமதப் பேரவை, கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந் ததன் பிரகாரம், இந்த விடயத் தில் பிரதேச செயலாளர் எடுத் துக் கொண்ட நடவடிக்கை பற்றி அறிக்கை சமர்ப்பிக்கு மாறு ஆளுநர் பிரதேச செய லாளரைப் பணித்திருந்தார்.

அதன் பிரதிபலனாக வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ் தவ மதப் பிரிவுகளைப் பின் பற்று வோரின் நலன்கருதி, வாகரைப் பிரதேசத்தில் மயா னத்துக்கு இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது என வாக ரைப் பதில் பிரதேச செயலாளர் கே. தனபாலசிங்கம் ஆளுந ருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் ''வாகரை யில் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்களுக்கான சேமக் காலை அமைப்பது தொடர்பாக, வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வாகரை வடக்கு கிராம உத்தியோகஸ்தர் பிரிவில் உள்ள கணுக்காமடு எனும் கிராமத்தில் 40 ஆம் கட்டைக்கு அருகில் மட்டக் களப்பு - திருகோணமலை பிரதான வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் ஓர் ஏக்கர் நிலம் இனங்காணப்பட் டுள்ளதாகத் தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வ மதப் பேரவைக் கான இணைப் பாளர் இராசையா மனோகரன் குறிப்பிட்டுள்ளார். இந்தக் காணியை அரச சட்டத்தின் கீழ் பாராதீனம் செய்வதற்கான ஏனைய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.- எனகுறிப்பிட்டுள்ளது.- என்றும் அவர் தெரிவித்தார். (க)

## யாழில் பேரீச்சை!



யாழ்ப்பாணம், ஒக. 25
யாழ்ப்பாணத்தில் பேரீச்சை மரம் வெற் றிகரமாக வளர்ந்து பயன்கொடுத்துள்ளது.

பாலைவனப் பகுதி யில் விளைய கூடிய பேரீச்சை மரம் சாவகச் சேரி பகுதியை சேர்ந்த ஒவரின் வீட்டில் விளைந்துள்ளது.

30 வருடங்களாக சாவகச்சேரியில் பேரீச்சை மரம் பாரா மரித்து வந்த நிலை யில், கடந்த மூன்று வருடங்களாக அதன் பலாபலன்களைதொடர்ச் சியாகப்பெறுகின்றனர்.

அத்துடன், இந்த மரங்கள் பூத்து காய்த்து நல்ல பழங்கள் கிடைக் கின்றன என வீட்டின் உரிமையாளர் தெரி வித்தார்.

அதிக வெப்பமான காலநிலையில்வளரும் பேரீச்சை மரம் யாழ் . மண்ணில் விளைந் தமை அபூர்வமான விட யமாக பார்க்கப்படு கிறது.

ஏற்கனவே, மிகவும் குளிரான பகுதியான நுவரெலியாவிலும் பேரீச்சை மரம் வளர்ந் திருந்தமை குறிப்பிடத் தக்கது.

## அரச மருத்துவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பர்!

மாலபே தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பில் ஜனாதிபதியுடன் முக்கிய சந்திப்பு ஒன்று இன்று இடம்பெறவுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரி வித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியுடன் இடம்பெறும் சந்திப்பு மிகவும் முக்கியமான தாக இருக்கும் என்றும், இந்த சந்திப்பின் போது கல்லூரியுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் பங்கேற்கவுள் ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இதன்போது சாதகமான முடிவு எட்டப்படும் என்று மருத்துவர் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. இதற்கு இடையில் இந்த கல்லூரிக்கான புதிய அனும திகளை கோரும் வர்த்தமானியை இரத்துச் செய்யுமாறும் தமது சங்கம் கோரியுள்ளது என அதன் செயலாளர் ஹரித்த அலுத்கே தெரிவித்துள்ளார்.

## ஆலயங்களின் புனரமைப்புக்காக சிமெந்து பைகள் வழங்கி வைப்பு!

மட்டக்களப்பு, ஒக. 25
மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட ஆலயங்களுக்கு, அவற்றின் புன ரமைப்பு பணிகளுக்காக சிமெந்து பைகள்கள் வழங்கி வைக்கப் பட்டுள்ளன.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கத்தின் பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த சிமெந்து பைகள் நேற்று கிரான் பிரதேச செயலகத்தில் வழங்கி வைக்கப்பட் டுள்ளன.



இதன்போது, கல்லடி வெட்டை காட்டுப் பிள்ளையார் ஆலயம், மீரான்கடவை மாவடிப் பிள்ளை யார் ஆலயம் உட்பட சில ஆல யங்களுக்கு சிமெந்து பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இது போன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுக்கும் உட்பட்ட சுமார் 52 ஆலயங்களுக்கு அவற் றின் புனரமைப்பு பணிகளுக்காக சிமெந்து பைகள் வழங்கி வைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (க)

## போதைப்பொருள் பரம்பலை தடுக்க விசேட வேலைத் திட்டம்: ஜனாதிபதி!

நாட்டில் போதைப்பொருள் பரவுவதைத் தடுப்பதற்கு பொலிஸாரும் முப்படை புல னாய்வுப் பிரிவுகளும் விசேட நிகழ்ச்சித் திட்டங்களை நடை முறைப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி பாதுகாப் புத்துறை முக்கியஸ்தர் களுக்குப் பணிப்புரை விடுத் துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக நேற்று முந்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந் துரையாடலின்போதே ஜனா திபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

சட்டவிரோதமான முறை யில் போதைப்பொருள் விற்பனைமற்றும்நாட்டிற்குள் போதைப் பொருள் கொண்டு வருவதற்கு எதிரான சட் டங்கள் எவ்வளவு தூரம் பல மாக இருந்தபோதும், நாட்டின் சில பிரதேசங்களில் போதைப் பொருள் பரவுவது அதிகரித் திருக்கின்றது என அறிக் கைகள் தெரிவிக்கின்றன.

இன்று ஒரு பெரிய சமூக சவாலாக மாறியுள்ள இந்த அழிவில் இருந்து இளைஞர் தலைமுறையை விடுவிப் பதற்கு சமூகத்தின் பொறுப்பு வாய்ந்த அனைத்துத் தரப்பி னரும் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டுக்குள் போதைப் பொருளைக் கொண்டு வரு வதைத்தடுப்பதற்குதற்போது நடைமுறையில் உள்ள நிகழ்ச்சித் திட்டங்களை அதி காரிகள் மேலும் இறுக்கமாக நடை முறைப்படுத்த வேண் டும். இந்த நடவடிக்கைகளில் வெளிநாடுகளின் உதவி களைப் பெற்றுக்கொண்டு செயற்பட வேண்டும்.

நான் மேற்கொண்ட பல வெளிநாட்டு பயணங்களின் போது போதைப்பொருள் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒத்து ழைப்புவழங்கபலநாடுகளின் அரச தலைவர்கள் உறுதி யளித்தனர்.

பாடசாலைப் பிள்ளைகளை இலக்குவைத்து மேற்கொள் ளப்படும் போதைப்பொருள் வியாபாரத்தைத் தடுப்பதற்கு எதிர்காலத்தில் விரிவான நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக முன்னெடுக்கப் படும் நிகழ்ச்சித்திட்டங் களுக் குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி அத்திட்டங்களை பலப்படுத் தும் விடயத்தில் அரசு தனது பொறுப்பை முழுமையாக நிறைவேற்றும் .- என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு ஐ.நா. அழுத்தம் கொடுக்கவேண்டும் வலியுறுத்துகின்றது சர்வதேச மன்னிப்புச் சபை

கொழும்பு, ஓக. 25

ஜெனீவாவில் இலங்கை அளித்துள்ள முக்கியமான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் முன்னேற்றங்களை காண்பியுங்கள் என இலங்கை அரசுக்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இந்தநிலையில்,கவுன்ஸிக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் முன்னேற்றங்களைஉறுதிப்படுத்த வேண்டும் என்று இலங்கை அதிகாரிகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் அழைப்பு விடுக்கவேண்டும்.

குறிப்பாக, நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான கலந்தாய்வு செயலணியின் பரிந்துரைக்கு அமைய, உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டு பொறிமுறைகளுக்கான காலத்திட்ட வரைவு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும்.

நீதி, உண்மை, இழப்பீட்டு பொறிமுறைகள் அனைத்துலக தரம்வாய்ந்தவையாக இருக்கும் வகையிலும், சட்ட மறுசீரமைப்பு மற்றும் மீள நிகழாமையை உறுதி செய்வதற்கான ஏனைய நடவடிக்கைகளை எடுப்பதற்கும், ஐ.நா. மனித உரிமைகள்கவுன்ஸில்தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க வேண்டும்.

சட்டத்தை நடைமுறைப் படுத்தும் முகவர் அமைப்புகள், மனித உரிமை சட்டத்தை கடுமையாக நடைமுறைப் படுத்துவதற்கும், ஐ.நா. அமைதிப்படையில் பங்கேற்கும் இலங்கையர்கள் அனைவருக்கும், பயிற்சி மற்றும் திட்டங்களில் பங்கேற்கும் இராணுவத்தினருக்கும் சமமாக மனித உரிமைகள் ஆய்வு இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கைக்கு ஐ.நா. உதவ வேண்டும்.

சர்வதேச சட்டம் அல்லது ஏனைய மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளுக்கு பரஸ்பர சட்ட உதவிகளையும், ஒத்துழைப்பையும்வழங்கவேண்டும். என்றும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிடம் சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

## ஒற்றுமையைச் சீர்குலைத்தமையால் விஜயதாஸவை நீக்க நேரிட்டது!



### அமைச்சரவைப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, ஓக. 25

நீதியமைச்சர் பதவியிலிருந்து விஜயதாஸ ராஜபக்ஷவை தூக்குவதற்கு காரணம் அவர் ஒற்றுமைக்கு பங்கம் விளைவித்தமையே என இணை அமைச்சரவை பேச்சாளர் கயந்த கருணா திலக தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது,அமைச்சரின் பதவி பறிப்புத் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த கயந்த -

ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் முகமாக செயற்பட்டமையே விஜயதாஸ ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுப்பதற்கான காரணமாக அமைந்தது.

அதுமாத்திரமன்றி, அம்பாந்தோட்டைதுறைமுகம் தொடர்பாகவும், அமைச்சரவையில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் வெளியில் சென்று கருத்துத் தெரிவித்தமையோடு, அமைச்சர்களையும் விமர்சித்துள்ளார்.

இது போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர் மீது முன்வைக்கப்பட்டதனாலேயே இந்த முடிவு எடுக்க வேண்டிய நிலையேற்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அமைச்சர் ராஜித சேனா ரத்ன தெரிவித்தவை வருமாறு:-

நீதித்துறைகட்டமைப்பில் ஓர் அங்கமாக முன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின்காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மோசடிகள் தொடர்பாகவும், கொலைகள் தொடர்பிலும் விசாரணை செய்ய முடியும்.

தற்பொழுது திருடர்கள் வெட்கமின்றி நடமாடுகிறார்கள். மத்திய வங்கியின் முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவும் இவ்வாறான விசாரணைகளை நடத்த முடியும். - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கூட்டு எதிரணியின் பொதுவேட்பாளர் அல்லவாம் விஜயதாஸ ராஜபக்ஷ!



கொழும்பு, ஓக. 25

நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விஜயதாஸ ராஜபக்ஷ கூட்டு எதிரணியின் பொது வேட்பாளராக நிறுத்தப்படமாட்டார் என்று கூட்டு எதிரணியின்நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட விஜயதாஸ ராஜபக்ஷவை கூட்டு எதிரணி, பொதுவேட்பாளராக நிறுத்தப் போகிறது எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.


இதுகுறித்து கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில், நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகமவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், கூட்டு எதிரணி ஒருபோதும் பொது வேட்பாளருக்குப் பின்னால் செல்லாது. எதிர்காலத்தில் அவ்வாறு யாரையும் நிறுத்தாது. நாங்கள் எமது வேட்பாளரையே நிறுத்துவோம்.

விஜயதாஸ ராஜபக்ஷ எமது கட்சிக்கு வந்தால் ஏற்றுக்கொள்வோம். அவர் மட்டு மல்ல யார் வந்தாலும் சேர்த்துக் கொள்வோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## விஜயதாஸ ராஜபக்ஷவை நீக்கியமை பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது!

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிப்பு



விஜயதாஸ ராஜபக்ஷவை நீதி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியமை பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

விஜயதாஸ பணி நீக்கப்பட்டமை குறித்து கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் பிரச்சினை விஜயதாஸவிற்கு மட்டும் வரையறையானதல்ல. இது ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பூசலையே வெளிக்காட்டுகின்றது.

அமைச்சுப்பதவியிலிருந்து விஜயதாஸவை நீக்கியமையால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டாது.


ஒட்டுமொத்தமாக இந்த அரசே மக்களுக்கு பிரச்சினையாக அமைந்துள்ளது. கட்சியின் விருப்பு வெறுப்புக்களைப் பூர்த்திசெய்யாத காரணத்தினால் விஜயதாஸ ராஜபக்ஷ பணி நீக்கப்பட்டார்.

அரசிலுள்ளோரும், அமைச்சர்களும் தங்களது நலனை அடிப்படையாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றனர்.

கள்வர்கள், மோசடிகாரர்களுக்கு எதிராகச்சட்டநடவடிக்கைஎடுப்பதற்குமெய்யாகவே அரசுக்கு அவசியமில்லை.

மக்களின் எதிர்ப்பு காரண மாகவே ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## திருகோணமலை அபிவிருத்தியில் பங்கெடுப்பதற்கு ஜப்பான் ஆர்வம்!



கொழும்பு,ஓக.25

திருகோணமலையின் அபிவிருத்தியில் பங்கெடுக்க ஜப்பான் ஆர்வம் கொண்டுள்ளது என்று இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகனுமா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் றோகித போகொல்லாகமவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிழக்கின் சமூக, பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும்.திருகோணமலை நகரின் அபிவிருத்தி தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

திருகோணமலை அபிவிருத்தி தொடர்பானதிட்டங்களை வரைய ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சிங்கப்பூருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் பங்கெடுக்க ஜப்பானும் விருப்பம் கொண்டுள்ளது என்று ஜப்பானிய தூதுவர் தெரிவித்துள்ளார். (க)

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கொழும்பு மக்களுடன் சந்திப்பு!

கொழும்பு, ஓக. 25

மாற்றத்திற்கான புதிய பாதை NFGG எனும் தொனிப் பொருளில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் கொழும்பு மக்களுடனான சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் ஒன்று கொழும்பு தபால் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் அப்துர் ரஹ்மான், செயலாளர் நஜா முகம்மத், பிரதித் தவிசாளர் சிராஜ் மஸ்ஹூர் ஆகியோர் உரையாற்றினர்.

இந்த உரைகளின் போது விழுமிய அரசியலை நல்லாட்சிக்கான முன்னணி எவ்வாறு முன்னெடுத்துச் செல்கிறது?, அதில் உள்ள சவால்கள் என்ன?, இதில் பொதுமக்களிடம் எதிர்பார்க்கும் ஒத்துழைப்பு என்ன? என்பது தொடர்பில் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் துறைசார் நிபுணர்கள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும், பொதுமக்களிடம் கேள்வி பதில் நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்த கேள்வி பதில் நிகழ்வில் பல்வேறு விமர்சனங்கள், கேள்விகள், ஆலோசனைகள் என்பன மக்களால் முன்வைக்கப்பட்டு, அதற்கு நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை உறுப்பினர்களால் பதில்களும் வழங்கப்பட்டன. (க)

# வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக 32 ஆவது ஆண்டு நிறைவு கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.25

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டமும் கழக செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலும் வதிரியிலுள்ள கழக மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு கழகத் தலைவர் வ.சிவச்சந்திரதேவன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவு செய்யப்படுகின்றமையோடு கடந்த 25 வருடங்களுக்கு மேலாக கழகம் இயங்கி வரும் கட்டடத்தை அதன் உரிமையாளருக்கு ஒப்படைத்த பின் கழகம் இயங்கும் இடம் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்படும்.

ஆண்டுச் சந்தாவை இதுவரை செலுத்தாதவர்கள் தமது சந்தாவைக் கூட்டம் நடைபெறும் தினத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கழகத்துடன் தொடர்புடையவர்கள் அனைவரையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் கழகத் தலைவர் கேட்டுள்ளார்.

## தினசரி ராசி பலன் 25.08.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 09 ஆம் நாள் சதுர்த்தசி இரவு 08.32 மணி வரை. பின்னர் பஞ்சமி. நட்சத்திரம்: அத்தம் பகல் 2.35 மணி வரை. பின்னர் சித்திரை: அமிர்த்த சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்- பகல் 10.40 மணி முதல் 12.12 மணி வரை. சுபநேரம்- மாலை 06.05 மணி முதல் 7.34 மணி வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தசி. இன்று விநாயக சதுர்த்தி. பிறந்த நட்சத்திர வழிபாடு: அத்தம்.**

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** இன்பமான நாள் ஆகும். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்களின் அனுசரணை கிடைக்கும். திருமண வாய்ப்புகள் வந்து சேரும்.

**ரிஷபம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரத்தில் ஆக்கபூர்வ முன்னேற்றம் காணப்படும்.

**மிதுனம்:** யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்ப அமைதி குன்றும். செய்யும் தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும். திருமணப் பேச்சு வார்த்தைகள் குழப்ப நிலையில் இருக்கும்.

**கடகம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதமாகும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**சிம்மம் :** சுபீட்சமான நாள் ஆகும். பணம் எல்லா வழியாலும் வந்து சேரும். குடும்ப மகிழ்ச்சி பலப்படும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும்.

**கன்னி :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் சிறந்த ஆதாயத்தைத் தரும்.

**துலாம் :** கவலையான வாரம் ஆகும். வருமானம் நலிவடையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். மாணவர்கள் தேர்வில் தோல்வி அடைவார்கள்.

**விருச்சிகம் :** சுபீட்சமான நாள். பணபலம், மன பலம் அதிகரிக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும்.

**தனுசு :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். தேக சுகம் பாதிப்படையும். மருத்துவச் செலவு உண்டாகும்.

**மகரம் :** மேன்மையான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும். வியாபாரம் மேன்மை அடையும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**கும்பம் :** துயரமான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் கடன் வாங்க நேரிடும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள்.

**மீனம் :** விருத்தியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3, 4 ஆம் சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்களில் உதயமானோர் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# டெங்கால் பல்கலை மாணவர்கள் எவரும் யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழக்கவில்லை!

## வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி தகவல்

யாழ்ப்பாணம், ஒக. 25

டெங்கு நோய் தொடர்பில் இதுவரை யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் எவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

டெங்கு நோய்த் தொற்று காரணமாக பல்கலைக்கழக மாணவன் ஒருவர் உயிரிழந்தமையை அடுத்து பல்கலைக் கழத்தின் விஞ்ஞான பீடம் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளது என வெளியான தகவல் குறித்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

டெங்கு நோயால் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எவரும் இதுவரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை .

விஜயரட்ணம் விந்துசன் என்ற இளைஞன் இருதய அழற்சி நோயால் உயிரிழந்துள்ளார். இருப்பினும் அவரது இறப்புத் தொடர்பான மேலதிக பரிசோதனைக்காக அவரது உடலில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 2014 ஆம் ஆண்டு ஆயிரத்து 39 பேர் டெங்கு நோய்த் தாக்கத்தால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஆயிரத்து 309 பேர் டெங்கு நோய்த்தொற்றால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு 670 பேர் டெங்கு நோய்த் தொற்றால் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாண்டு ஆரம்பம் முதல் கடந்த 21 ஆம் திகதி வரை 1702 பேர் டெங்கு நோய்த் தொற்றால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவர் உயிரிழந்துள்ளனர் என யாழ். போதனா வைத்தியசாலை புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 'யார் அந்த தேவதை?' இசை வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.25

சங்கவி பிலிம்ஸ் (SHANGAVI FILMS) ஆஸ்திரேலிய தயாரிப்பு நிறுவனமான சந்திரா இணைந்து வழங்கும் 'யார் இந்த தேவதை?' இசை வெளியீடும் சங்கவி பிலிமஸின் அகங்காரம் திரைப்பட ஆரம்ப விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான ஆ.புவனேஸ்வரன், து.ரவிகரன், கௌரவ விருந்தினராக இயக்குநர் என்.எஸ்.தனபாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ஆவணிச் சதுர்த்தி சிறப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி முதல் விநாயக சதுர்த்தி நிகழ்வு இடம்பெறும்.

வேத பாராணயத்தைத் தொடர்ந்து இளைஞர்களின் விநாயகர் பக்தி மாலை இடம்பெறும்.

வடமாகாண ஆளுநரின் செயலாளர் எம்.இளங்கோவன் 'விநாயகரின் பெருமைகள்' குறித்துச் சிறப்புரை ஆற்றுவார். (உ)

* * *

திருநெல்வேலி ,ஓக.25

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய ஆவணி சதுர்த்தி உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி பூசையைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை நடைபெற்று விநாயகப் பெருமான் வெளிவீதியுலா வந்து அருள் பாலிப்பார்.

* * *

இயக்கச்சி முகாவில் பறையோம்பிக்குளம் ஸ்ரீ இராஜகணபதி ஆலய விநாயகர் சதுர்த்தியும் வரிசாபிடேக தின விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது விநாயகர் வழிபாடு, கும்பபூசை, அபிஷேகம் மற்றும் சங்காபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

* * *

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி, அரசடி விநாயகர் ஆலய கணபதி ஹோமம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும்.

# மகோற்சவம்

யாழ்ப்பாணம்,ஓக.25

ஈவினை மத்தி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.25

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை நமசிவாயம் எழுதிய 'நல்ல அம்மா' ஆன்மீக நூல் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு செல்வச்சந்நிதி ஆலய கிழக்கு வீதியில் உள்ள செல்லையா ஐயர் திருமண கலாசார மண்டபத்தில் கந்தளகம் மறவன் புலவு க.சச்சிதானந்தன் தலைமையில் நடைபெறும்.

# கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.25

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்காக இயங்கும் உயிரிழை நிறுவனம் தனது அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயும் கூட்டமொன்றை இன்று பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு கலாசார மண்டபத்துக்கு அருகில் உள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களை இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உயிரிழை நிறுவனத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# அர்த்தநாரீ அரசு

கம்பவாரிதி இ.ஜெயராஜ் தனது 'உகரம்' இணையத்தில் வரைந்த அரசியல் சிந்தனை இது. விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதற்கு முன்னர் வரையப்பட்டது.

உருப்படுமா? உடையுமா? எனும் கேள்வியை எழுப்பி, தள்ளாடி நிற்கிறது நல்லாட்சி அரசு.

சைவசமயத்தில் சிவனும் உமையும் பாதி பாதி கலந்ததான ஒரு வடிவம் உண்டு.

ஆணும் இல்லாமல் பெண்ணும் இல்லாமல் இருக்கும் அவ்வடிவிற்கு அர்த்தநாரீ என்று பெயர்.

இரண்டுங் கெட்டதாய் இருக்கும் அவ் 'அர்த்தநாரீ' வடிவை ஒத்ததாகவே இருக்கிறது இன்றைய நல்லாட்சி அரசு.

கிட்டத்தட்ட நம் வடமாகாணசபையின் நிலையைப் போலத்தான்; நல்லாட்சி அரசின் நிலையும். ஒரே ஒரு வித்தியாசம். - நல்லாட்சி அரசின் தலைவர்கள் சற்று நிதானமாய்ச் செயற்படுகிறார்கள். எங்கள் தலைவர்களிடம் அதுவும் இல்லை!

✦ ✦ ✦

சோதிடத்தை நம்பி அவசர அவசரமாய்த் தேர்தலில் குதித்த 'மஹிந்தவுக்கு' எதிராக, அதுவரை பகைமுகம் காட்டி நின்ற பேரினத்தின் இருபெருங் கட்சிகளும் கைகோத்தன. மஹிந்தவின் சர்வாதிகாரத்தை வீழ்த்தவென தேர்தல் களத்தில் குதித்து வெற்றியும் ஈட்டின. அப்புரட்சியில் மற்றவர்களால் முன் தள்ளப்பட்டு அதுவரை முகம் தெரியாதிருந்த மைத்திரி, வடக்கு முதல மைச்சரைப் போலவே திடீரென யாரும் எதிர்பாராத வண்ணம் ஜனாதிபதியானார்.

✦ ✦ ✦

மஹிந்த குடும்பத்தினரிடமிருந்து கட்சியையும் தேசத்தையும் மீட்கவேண்டிய அவசியம் ஒருபுறம்.

இறுதிப் போரில் நிகழ்ந்த மனித உரிமை மீறலுக்கு எதிராக உலகு தந்த நெருக்கடி மறுபுறம்.

இவ்விரண்டு நெருக்கடிகளிலிருந்தும் மீண்டுவர, நல்லாட்சி அரசு பெரும்முயற்சி செய்யவேண்டியிருந்தது.

அதனால், தமிழர்களுக்கான உரிமைப் பிரச்சினையை அங்கீகரித்து நல்லாட்சித் தலைவர்கள் பேசிய போதும், எளிமையும் இனிமையும் பட ஜனநாயகப் பண்புகளைக் காட்டி மைத்திரி நடந்து கொண்ட போதும், தமிழ்த் தலைவர்களை மதித்தமையின் மூலம் தமிழர்களை அங்கீகரிப்பதாய் அவ் அரசு காட்டிக் கொண்டபோதும், இலங்கையில் புதிய சமாதானயுகம் ஒன்று பிறக்கப் போகிறது எனும் நம்பிக்கை பலரது மனங்களிலும் ஆழப்பதிந்தது. எல்லாம் சில நாள்களுக்குத்தான்!

✦ ✦ ✦

மைத்திரி தலைமையிலான சுதந்திரக்கட்சியும், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், ஆரம்பத்தில் ஒன்றுபட்டு நற்சகுணம் காட்டி நகர்ந்த போதும், அச்சகுணம் அதிக நாள் நீடிக்கவில்லை. அதற்குப் பல காரணங்கள்.

இன ஒற்றுமை விடயத்தில் தமிழர்கள் சார்பாக அவர்கள் எடுத்த சில முயற்சிகள், சிங்கள இனத்தைக் காட்டிக் கொடுக்கும் முயற்சிகளாய், மஹிந்த அணியினராலும் வேறு சில தீவிரவாத பேரின அமைப்புக்களாலும், பேரினத்தார் மத்தியில் வியாக்கியானம் செய்யப்பட்டன.

## உடையப் போவது நிச்சயம்

அபூர்வமாய் நிகழ்ந்த, ஆட்சி அமைக்கும் ஆற்றல் கொண்ட இருபேரினவாதக் கட்சிகளின் இணைப்பை, புத்திசாலித்தனமாய்ப் பயன்படுத்தி தமிழினத்திற்கு நன்மைதேடத் தெரியாத தமிழ்த் தலைவர்கள் சிலர், உலக நிர்ப்பந்தத்தால் நிகழ்ந்த, நல்லாட்சித்தலைவர்களின் பணிவை நிஜப்பணிவென நினைந்து, 'மிகைப்பட்டு செம்மாந்து' அறிக்கைகள் மூலம் அறைகூவல்களை அள்ளி விட, பேரினவாதிகளிடம் நீறுபூத்துக் கிடந்த இனப்பகை மீண்டும் மெல்லக் கிளர்ந்தெளத் தொடங்கியது.

அங்ஙனம் கிளர்ந்த பகைச்சூட்டில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த குழுவினர் குளிர்காய ஆரம்பித்தார்கள்.

✦ ✦ ✦

அதன் விளைவாய் சுதந்திரக்கட்சியில் பிளவு உருவாகத் தொடங்கியது.

ஐக்கிய தேசியக் கட்சியிடம் சுதந்திரக்கட்சியை மைத்திரி அடகு வைப்பதாய் எதிரணியினர் பிரசாரம் தொடங்க, அவர்களின் பின் சுதந்திரக்கட்சியினர் சிலரும் அணிசேர ஆரம்பித்தார்கள்.

அதனால் ஐக்கிய தேசியக்கட்சியினரும் அவர்களுக்கு எதிராய் 'கைமுறுக்கத்' தொடங்கினார்கள்.

இச்சம்பவங்களால் நல்லாட்சி அரசின் பெயரால் ஒற்றுமைப்பட்ட இருபேரினவாதக் கட்சிகளும், மீண்டும் 'கயிறிழுப்பை' ஆரம்பித்திருக்கின்றன.

தனது நம்பிக்கைக்குரியவரான முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை பதவியிறக்க, சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் காட்டிய வலிமையான எதிர்ப்புக்கு ரணில் பணியவேண்டி வந்தது. அதனால் கொதிப்படைந்த ஐக்கிய தேசியக்கட்சியினர் பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் விதுரனைப் பார்த்து துரியோதனன்.

"நன்றி கெட்ட விதுரா சிறிதும் நாணமற்ற விதுரா!
தின்ற உப்பி னுக்கே நாசம் தேடுகின்ற விதுரா!
அன்று தொட்டு நீயும் எங்கள் அழிவு நாடுகின்றாய்
மன்றிலுன்னை வைத்தான் எந்தை மதியை என்னுரைப்பேன்."

- என்று சொன்னாற் போல, இனங்களுக்கிடையிலான பகையுணர்வோடு, நடுநிலை தவறி, மஹிந்த சார்பாக இயங்கி நின்ற, நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக இன்று போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள். அடுத்தடுத்த தினங்களில் இப்பிரச்சினைக்கான முடிவு தெரியப்போகிறது. *(முடிவு தற்போது தெரிந்து விட்டது)*

✦ ✦ ✦

சிறிதாய்த் தொடங்கிய பகை மெல்ல மெல்ல முற்றியதால், இன்று, ஒன்றை ஒன்று விழுங்கும் ஆவேசத்துடன் இருகட்சிகளும்.

அவர்தம் பிளவு மஹிந்த தலைமையினரான மாற்றணியினர்க்கு வலியவரும் வரப்பிரசாதமாய்த் தோன்ற, அடங்கிக் கிடந்த அவர்கள் ஆர்ப்பரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

பிளவு நிச்சயமெனத் தோன்றுகிறது.

இவர்தம் பிளவுக்குப் பலியாகப் போவது தமிழர்தம் உரிமை முயற்சியேயாம்.

✦ ✦ ✦

ரணிலின் வருகையோடு அமெரிக்க அரசு, இலங்கை மீதான பகையை மெல்ல மெல்லக் கைவிடத் தொடங்கியிருக்கிறது. இலங்கையின் வளங்களைக் கூறுபோட்டுக் கொடுத்து, சீனாவையும் இந்தியாவையும் கூட, தன் ராஜதந்திரத்தால் ரணில் ஓரளவு வயப்படுத்தி நிற்கிறார்.

இங்கனமாய் உலக, பிராந்திய வல்லரசுகளின் அனுசரணை பெற்ற காரணத்தால், இனி, தமிழர்தம் பிரச்சினையை அந்நாடுகள் உலக அளவில், விரித்து, இலங்கைக்கு நெருக்கடியைக் கொடுக்கப்போவதில்லை என்பது நிச்சயம்.

## பாதிப்புத் தமிழருக்குத் தான்



எனவே, நல்லாட்சி அரசு உடையும் பட்சத்திலும் நட்டப்படப்போவது நாம்தான்.

வாராது வந்த மாமணியாக அமைந்த அரிய சூழலைப் பயன்படுத்தத் தவறிய நம் தலைவர்கள், அதுபற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் தமக்குள்ளே மோதிப் பொழுதுபோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கம்பவாரிதி
இ.ஜெயராஜ்

பொருந்தாத இரண்டு பொருந்திய போதே இச்சூழல் சில நாள்களுக்குத் தான் என, நம் தலைவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். அவர்கள் பிரியும் முன் அவ் அபூர்வ சேர்க்கையைப் பயன்படுத்தியிருக்கவேண்டும். அந்த அளவு தீர்க்கதரிசனம் இருந்திருந்தால் என்றோ நாம் உயர்ந்திருப்போமே.

ஏன்தான் நம் இனத்திற்கு இந்த இழிவோ?

காலைக்கதிர்
Kalaikkathir



# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

270

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

வட கொரியா மீது ஒரு தாக்குதலை, ஓர் அணுஆயுத தாக்குதலையும் கூட, நியாயப்படுத்த ட்ரம்ப் மற்றும் அவர் ஆலோசகர்களால் இப்போது கையில் எடுக்கப்பட்டு வருகின்ற ‘‘முன்கூட்டிய போர்’’ கோட்பாடு, முதலில் ஜோர்ஜ் டபிள்யு. புஷ்ஷால் ஈராக் மீதான படையெடுப்பு மற்றும் ஆக்கிரமிப்புக்குச் சாக்குபோக்காக கையாளப்பட்டது. ஜனாதிபதி பராக் ஒபாமாவோ, அமெரிக்க ‘‘மதிப்புகள் மற்றும் நலன்கள்’’ மீதான ஏதாவதோர் அச்சுறுத்தல் காரணமே, மற்றொரு நாட்டை இராணுவ ரீதியில் தாக்குவதற்கு அமெரிக்காவுக்கு போது மானது என்று அறிவித்து புஷ் கோட்பாட்டை விரிவுபடுத்தினார்.





இந்தப் புதிய கோட்பாடு சர்வதேச சட்டத்தை முற்றிலும் மீறுகிறது. ஓர் ஆக்கிரமிப்பு போர் தொடுப்பது தலையாய குற்றமாகும். இதற்காகத் தான் நாஜி தலைவர்கள் இரண்டாம் உலக போருக்குப் பின்னர் நூரெம் பேர்க் விசாரணைகளில் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள்.

ட்ரம்ப் நிர்வாகத்திடமிருந்து அதன் குறிப்புகளை எடுத்துக் கொண்டு, அமெரிக்க மற்றும் சர்வதேச ஊடகங்கள், வட கொரிய தலைவர் கிம் ஜோங்-யுன் ஐ ஒரு பைத்தியக்காரராக காட்டுவதற்கும் மற்றும் அவர் ஆட்சி ‘‘பெரிய பேரழிவுகரமான ஆயுதங்களின்’’ அச்சுறுத்தலை முன்னிறுத்துவதாக ஒட்டுமொத்தமாக ஊதிப் பெரிதாக்கி காட்டவும் அவற்றால் ஒரு தாக்குதல் நடத்தப்படுகிறது. இது சேர்பியா, ஈராக், லிபியா மற்றும் சிரியாவுக்கு எதிராக அமெரிக்க தலைமையிலான போர்களுக்குப் பின்னால் பொது கருத்துக்களை கொண்டு செல்லும் முயிற்சியில் பயன்படுத்தப்பட்ட நன்கறியப்பட்ட வழமையான நடைமுறையைப் பின் தொடர்கிறது.

இந்த சரமாரியான பிரசாரத்துக்குப் பின்னால், அதிகரித்து வரும் இந்த போரின் அடிப்படை குணாம்சம் என்ன? இது உலகின் மிகவும் பலமாக ஆயுதமேந்திய ஏகாதிபத்திய சக்திக்கும், இருபதாம் நூற்றாண்டு முழுவதிலும் இடைவிடாது காலனித்துவ மற்றும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையின் விளைவாக தனது சமூக மற்றும் அரசியல் குணாம்சத்தைக் கொண்டுள்ள ஒடுக்கப்பட்ட வறிய ஒரு நாட்டுக்கும் இடையிலான ஒரு மோதலாகும்.




ஜப்பானால் நாற்பது ஆண்டுகளுக்கும் அதிக கால காட்டுமிராண்டித்தன காலனித்துவ ஆட்சிக்கு பின்னர், அமெரிக்கா சியோலில் ஒரு இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவியதோடு, வடக்கு மற்றும் தெற்கு கொரிய தீபகற்பத்தில் செயற்கையான பிளவைப் பேணுவதற்கு 1950 களின் தொடக்கத்தில் இனப்படுகொலை-அளவிலான ஓர் போரைத் தொடுத்தது. அப்போர் முடிந்த பின்னரில் இருந்து, வட கொரியா மீண்டும் மீண்டும் ஆத்திரமூட்டல்கள் மற்றும் இராணுவ அச்சுறுத்தல்களுடன் சேர்ந்து, அமெரிக்க தலைமையிலான பொருளாதார முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டது.




**பியொங்காங்கிற்கு எதிராக ஐ.நா. பாதுகாப்பு அவையில் கடுமையான புதிய தடையாணைகளுக்கு ஒருமனதான வாக்களிப்புகளுக்கு பின்னர் உடனடியாக ட்ரம்பின் ஆத்திரமூட்டும் அறிக்கைகள் வந்துள்ளன என்பது, தடையாணை தீர்மானங்களுக்கு ஆதரவான சீனாவின் வாக்கை பலவீனத்தின் ஓர் அறிகுறியாக மற்றும் மோதலை உடனடியாக தீவிரப்படுத்துவதற்கு ஒரு பச்சைக்கொடி காட்டப்பட்டதாக வொஷிங்டன் அர்த்தப் படுத்தி உள்ளதை எடுத்துக்காட்டுகிறது.**

ட்ரம்ப் நிர்வாகத்தின் போர் அச்சுறுத்தல்களின் பிரதான இலக்கு வட கொரியா அல்ல, மாறாக அமெரிக்கா தனது பிராந்திய மற்றும் உலகளாவிய மேலாதிக்கத்திற்கு முக்கிய தடையாக கருதும் சீனா ஆகும். ஆசிய பசுபிக் எங்கிலும் அமெரிக்க இராணுவ ஆயத்தப்படுத்தல் பாசிசவாத பில்லியனர் ட்ரம்பில் இருந்து தொடங்கவில்லை. மாறாக அது ஒபாமா நிர்வாகம் அபிவிருத்தி செய்த ’’ஆசியாவை நோக்கிய முன்னெடுப்பின் ஒரு தொடர்ச்சியாகும். ஒபாமா இந்த புவிசார்-மூலோபாய நடவடிக்கையை ட்ரம்ப் வசம் ஒப்படைக்கையில், புதிய நிர்வாகம் முகங்கொடுக்கும் பிரதான இராணுவ சவாலாக வட கொரியாவை அடையாளம் கண்டதுடன், வட கொரிய ‘‘அச்சுறுத்தல்’’ சீனாவுடனான அமெரிக்க மோதலை அதிகரிப்பதற்கு சாக்குபோக்காக பயன்படுத்தப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கினார்.

பியொங்காங்கிற்கு எதிராக ஐ.நா. பாதுகாப்பு அவையில் கடுமையான புதிய தடையாணைகளுக்கு ஒருமனதான வாக்களிப்புகளுக்குப் பின்னர் உடனடியாக ட்ரம்பின் ஆத்திரமூட்டும் அறிக்கைகள் வந்துள்ளன என்பதுஇ தடையாணை தீர்மானங்களுக்கு ஆதரவான சீனாவின் வாக்கை பலவீனத்தின் ஓர் அறிகுறியாக மற்றும் மோதலை உடனடியாக தீவிரப்படுத்துவதற்கு ஒரு பச்சைக்கொடி காட்டப்பட்டதாக வொஷிங்டன், அர்த்தப்படுத்தி உள்ளதை எடுத்துக்காட்டுகிறது. வட கொரியாவுக்கு எதிரான ‘‘ஆத்திரமான மற்றும் சீற்றமான’’ அச்சுறுத்தல் சீனா, ரஷ்யா மற்றும் அமெரிக்க மேலாதிக்கத்துக்கு ஒரு சவாலை முன்னிறுத்தும் வேறெந்த சக்திகளுக்கும் ஒரு மறைமுகமான எச்சரிக்கையாகும்.

வட கொரியா மீதான எந்தவொரு அமெரிக்க தாக்குதலும், ஏற்கனவே 1950 இல் ஏற்பட்டதை போலவே, சீனாவுடன் துரிதமான ஒரு போரில் தீவிரமடையக்கூடும். மூலோபாய ரீதியில் அமைந்துள்ள கொரிய தீபகற்பம் மீதான அமெரிக்க கட்டுப்பாடு, 1930 களில் ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு செயல்பட்டதைப் போலவே, வடக்கு சீனாவுக்குள் ஆத்திரமூட்டல்கள் மற்றும் தலையீடுகளுக்கு உந்து சக்தியாக மாறும்.

67 ஆண்டுகளுக்கு முன்னர் வட கொரியாவை அமெரிக்கா கைப்பற்றுவதைத் தடுக்க போராடி யதுடன் இப்போது வரையில் பியொங் யாங்குடன் ஒரு பரஸ்பர பாதுகாப்பு உடன்படிக்கையைப் பேணி வருகின்ற சீனா, இந்த ஆபத்து குறித்து மிகவும் நனவு பூர்வமாக உள்ளதுடன், அதன் வடக்கு எல்லையை இராணுவ ரீதியில் பலப்படுத்தி வருகிறது.

(கேள்வி தொடரும்)




முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



75




**அத்தியாயம் - V**

## மரணத்தை எதிர்கொண்டோம்

கரவெட்டியிலிருந்து எமது மெய்க்காவலராக வந்த கிங்ஸ்லி, தமது பெற்றோரின் வீட்டுக்கு முன்னே இருந்த மருத்துவரின் வீட்டுக்கு எம்மைத் திரும்பவும் கொண்டு சென்றார். பின் இரவில் போய்ச் சேர்ந்தோம். அந்தப் பகுதி அமைதியாக இருந்தது. நாம் அடிக்கடி சென்று கொண்டிருக்கிறோம் என்று எல்லோரும் அறிந்த ஒரு வீட்டுக்குத் திரும்பவும் செல்வது எமக்கு பிடித்தமானதாகவும் இல்லை. ஆனால், வேறு வழி இருக்கவில்லை. போவதற்கு வேறு இடமும் இருக்கவில்லை. போய்ச் சேர்ந்த ஒரு மணி நேரத்தில் தூரத்தே நாய்கள் குரைப்பது கேட்டதும் எம்மை அச்சம் பீடித்தது. படையினர் எங்கே போகிறார்களோ என்று யோசித்தோம். ஆனால், நாய்கள் குரைப்பது வரவரப் பலமாகக் கேட்டது. ஒலிகள் எமது பக்கமே வந்து கொண்டிருந்தன. எமது வீட்டைச் சுற்றி வளைக்கத்தான் படையினர் வந்து கொண்டிருக்கிறார்களோ என்று சந்தேகித்தோம். பின்புறமாக ஒழுங்கை வழியாக வெளியே ஓடி வீட்டிலிருந்து 30 யார் தூரத்தில் உள்ள ஒரு வெற்றுக் கொட்டிலுக்குள் நுழைந்தோம். கிங்ஸ்லியின் குடும்பத்துக்குச் சொந்தமான ஓலைக் குடிசைக்கு அடுத்த வளவில் தட்டு முட்டுச்சாமான் வைக்கும் களஞ்சியமாக அது பயன் படுத்தப்பட்டது. நாள் முழுவதும் நாம் சாப்பிடவில்லை. பாலாவுக்கு பசியால் வயிற்று வலி எடுத்திருந்தது. கிங்ஸ்லியின் அம்மா தமது அடுப்பிலே எமக்காகச் சமைத்துக் கொண்டிருக்கும் இடியப்பமும் கோழிக் கறியும் மூக்கைத் துளைக்க பாலாவின் வாயால் நீர்வடியத் தொடங்கியது. ஆனால், அடுத்திருந்த மருத்துவரின் வீட்டுக்குள் இந்தியப் படையினர் நுழைந்ததும் கிங்ஸ்லி வீட்டுச் சூழ்நிலையும் தேடுதல் நடக்கும் என்ற எதிர்பார்ப்பில் அந்தப் பகுதியில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் நடுங்கத் தொடங் கியிருந்தன. கிங்ஸ்லியின் தாயார் வீட் டுக்குப் பின்புறமாக தரையில் ஒரு குழி தோண்டினார். எமக்கென்று சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட கோழிக்கறியையும் இடியப்பத்தையும் அந்த மூதாட்டி அந்தக் குழியில் புதைத்த போது பாலாவின் முகம் நிராசையால் விழுந்தது. ஒரு சிறிய குடும்பத்தில் தேவைக்கு அதிகமான உணவு நள்ளிரவிலே தயாரிக்கப்படும்போது சந்தேகத்துடன்வரும் படையினருக்குதிருப்தியளிக்கும். விளக்கம் கொடுப்பது கடினமாக இருக்கும். ஆகவே, அநாவசியக் கேள்விகளைத்தவிர்ப்பதற்காக உணவைப் புதைப்பதே பொருத்தமாகப்பட்டது. பசிக் கொடுமையைக் காட்டிலும் மிகப் பெரிய ஆபத்தான நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருந் தோம். இந்தியப் படைகள் எம்மைச் சூழ்ந்து விட்டிருந்தன. இந்தத் தடவை தப்பவே முடியாது என்று தோன்றியது.

கிங்ஸ்லி எச்சரிப்பதற்காக எம்மிடம் ஓடி வந்தார். தமது பெற்றோரின் வீட்டை நோக்கி பெருந்தொகைப் படையினர் ஒழுங்கை வழியே நடந்து கொண்டிருக்கின்றனர் எனக் கூறினார். இனி, எமது கதியை நிர்ணயிக்கும் நிலையில் நாம் இல்லை. நிலைமை எமது கட்டுப்பாட்டை மிஞ்சிவிட்டது. மரணத்தை அல்ல, இந்தியாவை முக முகமாக எதிர்த்து நிற்கும் ஒரு கட்டத்தை நாம் அடைந்து விட்டோம் என்று பட்டது. எமது மறைவிடத்தை விட்டு நாம் வெளியேற முற்பட்டிருந்தால் படையினர் எம்மை நிச்சயம் கண்டிருப்பார்கள். சுட்டுக் கொன்றிருப்பார்கள். வெறுமையாக இருந்த அந்தக் கொட்டிலில் பழைய கட்டில் ஒன்றில் நாம் படுத்திருந்தோம். விதிப்படி நடக்கட்டும் என்ற நிலை.''பயப்படாதே! உடலைத் துப்பாக்கி ரவைகள் துளைக்கும்போது, தற்காலிகமாக நோ ஏற்படும். அதோடு எல்லாம் சரி'' என்று பாலா என்னிடம் இரகசியமாகக் கூறினார். நான் அதை ஒட்டி அஞ்சவில்லை. கிங்ஸ்லியின் பெற்றோருடைய வீடு தேடப்பட்டுக் கொண்டிருந்த வேளை, கிங்ஸ்லியும் எம்மோடு, கொட்டிலில் ஒளிந்திருந்தார். தன்னுடைய வாழ்நாள் அன்றோடு சரி என்றும் அவரும் முடிவு செய்தார். சத்தம் எதுவும் போடாது அப்படியே இருந்தோம். தற்செயலாக அவர்கள் எம்மை பார்க்காது விடலாம் என்ற நப்பாசை. ஆம் ஒரு நப்பாசை தான். நாமே எம்மைக் கைவிட்ட நிலையா? வரப்போகும் மரணத்தை ஏற்றுக்கொண்ட உணர்வா? இரண்டு பேரும் ஒன்றாகச் சாகப்போகிறோம் என்ற எண்ணமா? என்னவோ தெரியவில்லை. ஆனால், எம்மில் எவரிடையும் கலக்கமோ அச்சமோ இல்லை நடப்பது நடக்கட்டும் என்று மௌனிகளாக நிலைமையைப் பார்த்த வண்ணம் இருந்தோம். சூழவிருந்த வீடுகளில் வாழ்ந்த மக்களுக்கு தமக்கு ஏற்படப் போகும் கதியை எதிர்பார்த்தபடி, காத்திருந்தார்கள். கிங்ஸ்லியின் வீட்டில் தேடுதல் நடத்திக்கொண்டிருக்கும்போது, படையினர் ஹிந்தியில் சத்தம் போடுகின்றமை கேட்டது. அதன் பின்னர் எங்கள் கொட்டிலுக்குள் வரப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்போடு காத்திருந்தோம். அவர்கள் வந்தார்கள். அவர்களுடைய டோச் லைற் ஒளி கொட்டில் ஜன்னல் ஊடாக அங்கும் இங்கும் பாய்ந்தது. மூச்சை அடக்கிக் கொண்டோம். படையினரின் சப்பாத்துச் சத் தம் கொட்டிலை நெருங்க நெருங்க, மரணமும் என்னை நெருங்குவதுபோன்ற உணர்வு. அவர்கள் வருகிறார்கள் என்று இரகசியமாக கூறியபடி பாலா என்னை அணைத்துப் பிடித்துக்கொண்டார். வரப்போகும் துப்பாக்கி ரவைகளை பார்க்க விரும்பாது எனது தலைக்கு மேல் ஒரு போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டேன். கொட்டில் வாயிலில் படையினர் கால் வைக்கப்போகும் நேரத்தில், கிங்ஸ்லியின் அக்காவினுடைய கணவரின் குரல், வேகமாக சிந்தித்து, துணிச்சலோடு முன்வந்து, படையினரின் கவனத்தை திசை திருப்பியது. அந்த வெற்றுக் கொட்டிலுக்குள் போவதால் எந்தப் பயனும் இருக்காது என்று அவர் கருத்து தெரிவித்தார். அந்தக் கொட்டிலுக்குள் எவருமே இருக்கமுடியாது என்றும் அவர் படையினரிடம் கூறினார். அத்துடன் நிறுத்தாது, படையினர் தேடுதலுக்காக செல்லக்கூடிய வேறு பாதையையும் காட்டினார். அவருடைய வார்த்தைக்கு மதிப்புக்கொடுத்து படையினர் கொட்டிலை விட்டு வேறு புறம் சென்றார்கள். இரவின் இருட்டு மீண்டும் கனத்தது. படையினர் ஒழுங்கையின் மறு புறத்தில் உள்ள வீடுகளை நோக்கிப் போனார்கள்.

*எமது மறைவிடத்தை விட்டு நாம் வெளியேற முற்பட்டிருந்தால் படையினர் எம்மை நிச்சயம் கண்டிருப்பார்கள். சுட்டுக் கொன்றிருப்பார்கள். வெறுமையாக இருந்த அந்தக் கொட்டிலில் பழைய கட்டில் ஒன்றில் நாம் படுத்திருந்தோம். விதிப்படி நடக்கட்டும் என்ற நிலை.' 'பயப்படாதே! உடலைத் துப்பாக்கி ரவைகள் துளைக்கும் போது, தற்காலிகமாக நோ ஏற்படும். அதோடு எல்லாம் சரி'' என்று பாலா என்னிடம் இரகசியமாகக் கூறினார்.*

கிங்ஸ்லியின் அக்கா கணவர் எம் உயிர்களைக் காப்பாற்றியிருந்தார். படையினர் அப்பால் சென்றதும் கிங்ஸ்லி குடும்பத்தினர் கொட்டி லுக்கு ஓடிவந்தார்கள். படையினர்சென்ற பக்கத்துக்கு எதிர்ப்பக்கமாக கிங்ஸ்லியின் மைத்துனர் எம்மை இட்டுச்சென்றார். படையினர் திரும்பி வரலாம் என்ற அச்சத்தில் எம்மை ஒளித்து வைப்பதற்கு ஏற்ற வேறு இடம் தேடுவதில் அந்த வீட்டார் துடிப்போடு முனைந்தார்கள். ஆனால், எங்கே எம்மை ஒளித்து வைப்பது? மருத்துவர் வீட்டுக்குச் செல்லமுடியாது. ஏன் என்றால் படை யினர் அங்கே தரித்திருந்தார்கள். படை யினரின் சுற்றி வளைப்பிலிருந்து நாம் தப்பிப்பிழைக்க வேண்டும் என்றால், ஒரே ஒரு வழி, சில யார் தூரத்திலிருந்த நெல் வயலுக்குள் போய்ப் பதுங்குவதே என்று எல்லோரும் அபிப்பிராயப்பட்டார்கள். உடனடியாக புறப்பட்டு அப்பால் உள்ள தென்னம் தோட்டத்தில் காத்திருக்கும் அவருடைய பாட்டனாரிடம் சென்றார். உயரமான முதியவர் அவர். படையினர் வருகிறார்களா என்று பார்த்து, ஒழுங்கை எல்லைக்கு எம்மைக் கூட்டிச் செல்ல அவருக்கு அசாத்திய துணிச்சல் இருந்திருக்க வேண்டும். நாம் குறி வைத்துச் சென்ற நெல் வயலைச் சுற்றியிருந்த ஒழுங்கைகளில் படையினர் காவல் புரிந்து கொண்டிருந்தார்கள். முதியவரின் நெடிய உருவம் அந்த இருளில் நகர்வதை படையினர் கண்டால், அவரை சுட்டுக் கொல்ல அவர்கள் தயங்கமாட்டார்கள். நாம் ஒழுங்கையைக் கடக்கும்போது காவல் உலா படையினர் எம் முன்னே வந்து விடுவார்களா, அல்லது இனம் கண்டு விடுவார்களா என்ற சிந்தனையோடு தயங்கினோம். ஆனால், ஒழுங்கையை குறுக்கு வெட்டி கடப்பதிலேயே எமது உயிர் தங்கியிருக்கிறது என்பதும் எமக்குத் தெரியும். தப்பிவிட வேண்டும் என்ற மன உந்தலோடு வெளியே வந்து ஒவ்வொருவராக ஒழுங்கையைக் கடந்து வெட்டுக் குறுக்காகச் சென்று வயல் கரையில் உள்ள முள்ளுப் பற்றைகளை மிதித்து கடந்து, புதிதாக நெல் முளை விடும் வயலுக்குள் இறங்கினோம்.

(தொடரும்...)

> கதிரவன் சிங்கராசியில் இருக்கும் போது, அதற்குரிய ஆவணி மாதமே ஆண்டின் முதல் மாதமாகக் கருதப்பட்ட ஒரு காலத்தில் ஓங்காரத் தெய்வ வணக்கம் சிறப்பாக அத்திங்களில் எல்லோராலும் நடத்தப் பெற்று வழக்கத்தில் வந்ததை விநாயகசதுர்த்தி உணர்த்துவதாகச் சிலர் கருதுவர்.



# வேண்டும் வரம் அருளும் விநாயகர் சதுர்த்தி விரதம்!

விநாயக விரதங்களுள் மிக விசேஷமானது ஆவணி சதுர்த்தியாகும். இந்த நன்னாளை இந்துக்கள் யாவரும் விரும்பி அனுஷ்டிப்பர்.


ஆவணி சதுர்த்தி என்பது ஆவணி மாதத்துச் சுக்கில பட்சத்தில் வரும் சதுர்த்தியில் (வளர்பிறை நான்காம் நாள்) அநுட்டிக்கப்படும்.

ஆவணி சதுர்த்தியில் விடியற் காலையில் எழுந்து நீராடி, சங்கற்பித்து, பூசைக்குரிய சாதனங்களைச் சேகரித்துக்கொண்டு, கும்பம்வைத்து, அதன் முன்பு விநாயகரின் திருவுருவை எழுந்தருளச் செய்து, பூசித்து, அர்ச்சனை செய்து, தூபதீபம் சமர்ப்பித்து வழிபடுதல் முறை. சந்திரனைப் பூசித்து விநாயக பூசையை முடித்துக் கொள்ள வேண்டும். ஆனால், இரவில் சந்திரனைப் பார்க்கவே கூடாது. சதுர்த்தியன்று சந்திரனைப் பார்த்த குற்றத்தால் விஷ்ணு அவமானம் அடைந்தாராம்.

விநாயகருக்கு அறுகும் வன்னிப் பாத்திரங்களும் மந்தாரைப் பூவும் மிகச் சிறந்தவை. புட்ப விதியிலே சதுர்த்தி விரத காலத்தில் விநாயகரை அர்ச்சிக்க வேண்டிய பாத்திரங்களாக பாசிப்பச்சை, கையாந்தகரை, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்தரி, அலரி, காட்டாத்தி, எருக்கு, மருது, விஷ்ணுகரந்தை, மாதுளை, தேவதாரு, மரு, நெல்லி, சிறுசண்பகம், செந்தாளி, பாதிரி என்பவற்றையும் கூறுகின்றது. சதுர்த்தியில் அறுகுக்கு முதலிடம் தரப்படுகின்றது.

கதிரவன் சிங்கராசியில் இருக்கும் போது, அதற்குரிய ஆவணி மாதமே ஆண்டின் முதல் மாதமாகக் கருதப்பட்ட ஒரு காலத்தில், ஓங்காரத் தெய்வ வணக்கம் சிறப்பாக அத்திங்களில் எல்லோராலும் நடத்தப் பெற்று வழக்கத்தில் வந்ததை விநாயக சதுர்த்தி உணர்த்துவதாகச் சிலர் கருதுவர். விநாயகர் ஆலயங்களில் சிறப்பாகவும், ஏனைய ஆலயங்களில் பொதுவாகவும் இவ் விரதநாளிலே விசேஷ அபிஷேகம் பூஜை வழிபாடுகள் நிகழ்கின்றன. எனினும் இவ் விரதத்தைப் பூஜை வழிபாடுகளுடன் இல்லங்களிலும் கைக்கொள்வது நன்று.

விநாயகப் பெருமான் உற்பவமான தினம் இது என்பர். ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தித் திதியன்று இவ்விரதம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். மதிய வேளையில் சதுர்த்தி நிற்றல் அவசியம்.



கந்தபுராணத்தில் சிறப்பித்துக் கூறப்படும் இந்த விரதம், சூத முனிவரால் பஞ்ச பாண்டவருக்கு உபதேசிக்கப்பட்ட பெருமையை உடையது. கௌரவர்களின் கொடுமையால் பாண்டவர்கள் வனவாசம் செய்ய நேர்கிறது. காட்டிலே மிகுந்த கஷ்டமும் மனவேதனையும் அடைந்திருக்கும் நிலையில் சூதமுனிவரை ஒருநாள் பாண்டவர்கள் சந்திக்கின்றார்கள்.

அப்போது தருமர் தமது கஷ்டங்கள் நீங்கிச் சுகமாக வாழ வழிகேட்கிறார். அதற்கு வழியாக இந்த விநாயக சதுர்த்தி விரதத்தை உபதேசிக்கிறார் சூதமுனிவர். அது மட்டுமல்லாமல் இந்த விரதத்தை முன்பு அனுஷ்டித்துப் பயன்பெற்றவர்களின் வரலாற்றையும் எடுத்துக் கூறுகின்றார்.

தமயந்தி நளனை மீண்டும் அடைந்ததும், கிருஷ்ணர் ஜாம்பவதியையும் சியமந்தகமணியையும் பெற்றுக் கொண்டதும், இராமன் சீதையை மீட்டதும், இந்திரன் அசுரப் பகையை வென்றதும், பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்ததும் இந்த விரத மகிமையால்தான் என்று விளக்கினார்.

இதனைக்கேட்ட பாண்டவரும் முறைப்படி விநாயக விரதத்தைக் காட்டிலேயே அனுஷ்டித்து உரிய காலத்தில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றனர். இஷ்ட சித்திகளைப் பெற நினைத்த காரியசித்தியைப் பெற விரும்புவோர் இவ்விரதத்தைக் கைக்கொள்ளலாம்.

அதிகாலை துயிலெழுந்து நீராடி நித்திய கர்மா அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பிரார்த்தனை வழிபாடுகள், ஆலய தரிசனம் முதலியவற்றில் ஈடுபட வேண்டும். மத்தியானம் ஒரு பொழுது உண்ணலாம். நல்லெண்ணெய் சேர்க்கக் கூடாது என்பது விதி. இரவு பட்டினி இருக்க முடியாதவர்கள் பால் பழம் அல்லது பலகாரம் உண்ணலாம்.

வீட்டிலே பூஜை வழிபாடுகளுடன் விரிவாக இந்த விரதமிருக்க விரும்புவோர் வீட்டிற்கு ஈசான திக்கில் பசும் சாணியால் மெழுகித் தூய்மையாக்கப்பட்டு வெள்ளைகட்டித் தயார் செய்யப்பட்ட ஓரிடத்தில் அல்லது பூஜை அறையிலே மாவிலை தோரணங்களாலும் சிறிய வாழை மரம் முதலியவற்றாலும் அலங்கரித்து அங்கு ஐந்து கும்பங்களை முறைப்படி ஸ்தாபித்து சித்த கணபதி, வித்தியா கணபதி, மோஷ கணபதி, மஹா கணபதி ஆகிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து பூஜைகளை நடத்தலாம்.

அருகிலுள்ள ஆலய அர்ச்சகரை அழைத்தும் இந்தப் பூஜையைச் செய்விக்கலாம். சங்கல்பத்துடன் ஆரம்பித்து பிராமண அநுக்ஜை, விக்னேஸ்வர பூஜை, புண்யாக வாசனம், பஞ்சகவ்ய பூஜை முதலிய பூர்வாங்கக் கிரியைகளிலிருந்து ஆவாஹனாதி சர்வோபசார பூஜைகளையும் செய்து தீபாராதனை நமஸ்காரங்களுடன் நிறைவு செய்யலாம்.

விசேஷ நிவேதன்களாக அறுசுவை உணவும், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் என்பனவும் சொல்லப்பட்டிருக்கின்றன. நாவற்பழம், விளாம்பழம், வாழைப்பழம், கரும்புத் துண்டு, வெள்ளரிப் பழம், அப்பம், மோதகம், கொழுக்கட்டை ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று என்ற எண்ணிக் கையில் படைத்து நிவேதனம் செய்ய வேண்டும். (வெள்ளரிப்பழத்தை இருபத்தொரு துண்டுகளாக நறுக்கி வைக்கலாம்).

விநாயக சதுர்த்திப் பூஜையில் இன்னொரு முக்கிய அம்சம். இருபத்தொரு பத்திரம், இருபத்தொரு புஷ்பம், இருபத்தொரு அறுகம்புல் என்பவற்றால் தனித்தனியாக அர்ச்சித்தலாம். இறைவனை அவரது பலவித நாமங்களையும் சொல்லி ஓங்காரத்துடன் உச்சரித்து வணக்கம் செலுத்துவதே அர்ச்சனையாகும். ஒவ்வொரு நாமம் சொல்லும் போதும் ஒவ்வொரு பத்திரம் அல்லது புஷ்பம் சமர்ப்பித்தல் மரபு.

### மாத சதுர்த்தி விரதம்

மாதந்தோறும் வருகின்ற பூர்வ பட்ச சதுர்த்தி நாள்களும் விநாயகருக்குரிய விரத நாள்களே. சதுர்த்தி விரதம் எனப் படும் இந்த நாள்களிலும் விரதமிருப்பது மிக விசேஷமானதாகும். அவ்வாறு அனுஷ்டிக்க முடியாதவர்கள் விநாயக சதுர்த்தி எனப்படும் ஆவணிச் சதுர்த்தி நாளில் விரதமிருக்கலாம்.

மாதந்தோறும் விரதமிருக்க விரும்புவோர் ஆவணிச் சதுர்த்தியிலே பூஜை வழிபாடுகளுடன் சங்கல்பபூர்வமாக ஆரம்பித்து (இந்தக் காரணத்துக்காக இந்த விரதத்தை நான் இத்தனை வருடம் கைக்கொள்வேன் என்று சங்கல்பம் பூண்டு) முறைப்படி தவறாமல் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டும். இருபத்தொரு வருடம் விரதமிருப்பது நன்று. இயலாததெனின் ஏழு வருடங்கள் அனுஷ்டிக்கலாம். அல்லது இருபத்தொன்றுக்குக் குறையாமல் மாத சதுர்த்தி விரதமிருந்து அதையடுத்து வரும் ஆவணிச் சதுர்த்தியில் நிறைவு செய்யலாம்.

### விரத உத்தியாபனம்

குறிப்பிட்ட கால எல்லை முடிந்ததும் அதாவது தாம் கைக்கொள்வதாகக் கருதிய வருடம் நிறைவு பெற்றதும் முறைப்படி விரதத்தை முடித்து விரத பலனைத் தருமாறு வேண்டுதல் செய்தலே விர தோத்யாபனமாகும்.

முன்பு கூறப்பட்ட விதமாக வீட்டிலே பூஜை வழிபாடுகள் செய்யும் போது தங்கம், வெள்ளி, செம்பு இவற்றில் ஏதாவதோர் உலோகத்தில் விநாயகர் திருவுருவத்தைச் செய்து வைத்து ஆவாகனம் செய்து பூஜை நடத்த வேண்டும்.

அன்று உபவாசமிருந்து மறுநாள் காலை புனர்பூஜையின் பின் (மீண்டும் பூஜை செய்தல்) உத்வாசனம் செய்து அர்ச்சகருக்குரிய தஷிணைதாம்பூலங்களுடன் உலோகப் பிரதிமையையும், கும்பப் பொருள்களையும், வேட்டி சால்வை முதலிய தானங்களையும் வழங்கி இதன்பின் மஹேஸ்வர பூஜை செய்து (சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல்) தாமும் காலை எட்டரை மணிக்கு முன்னதாகப் பாரணை செய்து விரத பூர்த்தி செய்யலாம்.

பூஜை முடிவில் கும்பத்தால் யஜமானுக்கு அபிஷேகம் செய்வித்தலும் சொல்லப்பட்டிருக்கிறது. உலோகப் பிரதிமை செய்வதற்கு வசதியில்லாதவர்கள் களிமண்ணால் செய்து வழிபட்டபின் அதனை நீர்நிலையில் விட்டு விடலாம். விநாயகர் சதுர்த்தி விரதம் அனுட்டிப்போர் வேண்டும் வரம் கிடைக்கப்பெறுவர் என்பது திண்ணம். ★

# அரசின் தாமதத்தால் தமிழர்கள் ஏமாற்றம்



### அல் - ஜெஸீரா பேட்டியில் சுமந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25

''நடந்து முடிந்த சம்பவங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுதல் மற்றும் சமத்துவ நிலையை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்களில் இலங்கை அரசு நியாயப்படுத்த முடியாத வகையில் வேண்டுமென்றே தாமதங்களை ஏற்படுத்தி வருகின்றது.''

- இவ்வாறு குற்றம் சுமத்துகின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்.

அல் - ஜெஸீரா தொலைக்காட்சி அண்மையில் வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

''இந்தத் தாமதங்களினால் எங்கள் மக்களைப் பொறுத்தவரை பெரும் ஆதங்கத்தில் - அதிருப்தியில் - ஏமாற்றத்தில் - அவர்கள் இருக்கின்றார்கள்.

"அவர்களைப்பொறுத்தவரை அரசு எந்த திசையில் செல்லுகின்றது என்பது அவர்களுக்குப் பொருட்டல்ல. அவர்கள் களத்தில் பெறுபேறுகளை எதிர்பார்க்கின்றார்கள். அது நடக்கவில்லை என்பதுதான் அவர்களின் ஏமாற்றம்.'' - என்றார் சுமந்திரன்.

தமிழ் மக்களுக்குத் தான் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவு செய்வதற்கு புதிய அரசு இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருப்பதாக தமிழ்க் கட்சிகள் கருதுகின்றன என 'அல் - ஜெஸீரா' தெரிவித்தது. (உ)

## சமல் ராஜபக்ஷவின் வீட்டில் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர்!

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் அறிக்கை ஒன்றை பெற்றுக் கொண்டுள்ளனர்.

வீரகொடியவில் உள்ள சமல் ராஜபக்ஷவின் வீட்டிற்கு நேற்று சென்ற நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் அவரிடம் அறிக்கை ஒன்றை பெற்றுள்ளனர்.

இதில், டி.ஏ. ராஜபக்ஷ அறக்கட்டளை தொடர்பில் தகவல்களைப்பெறுவதற்காகவே தன்னுடைய வீட்டிற்கு நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் வந்தனர் என சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.25

சர்வதேச மார்க்சிய குழு (யாழ்ப்பாணம்) அவ்வப்போது நடத்தி வரும் கலந்துரையாடல் வரிசையில் நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு ''வடக்கு மாகாணசபையும் வரலாற்றின் அநாமதேயங்களும்'' என்ற தலைப்பில் உசாவல் இடம்பெறும்.

யாழ்ப்பாணம்,ஸ்ரான்லி வீதி, 361 ஆம் இலக்கத்தில் உள்ள டி.எம்.ஐ.கல்வி நிறுவனத்தில் ஏ.ஸி. ஜோர்ச் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் ஆரம்ப உரையை சொ.சிவபாலன் (சிப்பி) ஆற்றுவார்.

## நுவரெலியாவில் பிரதேச சபைகளை அதிகரிக்க இணக்கம்

நுவரெலியா மாவட்டத்தின் பிரதேச சபைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் பைஸர் முஸ்தபாவுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி நேற்று முன்தினம் நடத்திய பேச்சின்போது இந்த இணக்கம் எட்டப்பட்டது என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

7 லட்சம் வரையான மக்கள் வசிக்கும் நுவரெலியா மாவட்டத்தில் தற்போது மாநகர சபை - 01, நகர சபைகள் - 02, பிரதேச சபைகள் - 05 என்ற அடிப்படையில் உள்ளூராட்சிக் கட்டமைப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை எப்படி? ஆய்வு செய்கின்றனர் ஜப்பானிய மாணவர்கள்!

கொழும்பு, ஓக. 25

இலங்கையின் வரலாற்று தொழில்நுட்பம் தொடர்பில் ஆய்வு செய்வதற்காக ஜப்பான் தேசிய பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அனுராதபுரம், பொலனறுவை, சிகிரியா போன்ற பிரதேசங்களில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பயன் படுத்தப்பட்ட தொழில்நுட்பம் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த மாணவர்கள் அண்மைய நாள்களில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஆரம்ப ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில் அனுராதபுரத்தில் ஆய்வு நடவடிக்கைகளுக்காக கலந்துகொள்ளவுள்ளனர்.

டோக்கியோ பல்கலைக் கழகத்தின் தொழில் நுட்பம் தொடர்பிலான 30இற்கும் அதிகமான மாணவர்கள் இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் ஆசியாவில் ஆய்விற்காக வந்துள்ள முதல் சந்தர்ப்பம் இதுவென அந்த பல்கலைக் கழகத்தின் வெளிவிவகார அமைச்சு தொடர்பிலான பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

## ரயிலில் பொதிகளை அனுப்பி வைக்கும் சேவைக்கான கட்டணங்கள் உயர்வு!

ரயிலின் ஊடாக பொதிகளை அனுப்பி வைக்கும் சேவைக்கான கட்டணங்கள் 50 வீதத்தால் உயர்த்தப்படவுள்ளன.

வர்த்தக நோக்கமற்ற மற்றும் நுகர்வு தேவைக்காக ரயிலின் ஊடாக பொதிகளை அனுப்பி வைக்கும் சேவைக்கான கட்டணங்களே இவ்வாறு உயர்த்தப்படவுள்ளன.

சிவில் விமான சேவை மற்றும் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இது தொடர்பிலான அமைச்சரவை பத்திரம் ஒன்றை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

இந்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக பொதிகள் சேவைக்கான கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறுவர் துஷ்பிரயோகம்; பகுதி நேர ஆசிரியர் கைது!

கொழும்பு, ஓக. 25

சிறுவர்துஷ்பிரயோகம் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட பகுதி நேர வகுப்பை நடத்தும் ஆசிரியர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆசிரியரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டதாக தேசிய பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

15 வயதான மாணவனுக்கு ஆபாசப் படங்களைக் காண்பித்து பாலியல் நடவடிக்கைக்குத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் விசேட பொலிஸ் விசாரணைப்பிரிவினரால் ஆசிரியர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த ஆசிரியர்தொடர்ந்தும் மேற்கொண்டு வந்த தொந்தரவு தொடர்பில் மாணவன் அவரது குடும்பத்தின் உளவியல் ஆலோசகர் ஒருவரிடம் கூறியுள்ளார். அவரது வழிகாட்டலில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனசிறுவர் பாதுகாப்பு தேசிய அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட ஆசிரியரை விசாரணைகள் முடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வட மாகாணசபையில் கவனவீர்ப்பு நடவடிக்கை!



சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வட மாகாணசபையில் கவனவீர்ப்பு நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது.

வட மாகாணசபையின் 103 ஆவது அமர்வு நேற்று வட மாகாணசபையின் பேரவை செயலக சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மாகாணசபை உறுப்பினர்கள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையிலான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து வட மாகாண முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்-

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் இராணுவத்தினர் வசமுள்ள மக்களின் பூர்வீக காணிகளின் விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின் அடிப்படையில், இந்த விடயம் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை தருமாறு வட மாகாண ஆளுநரிடம் கோரப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இது தொடர்பிலான விரிவான அறிக்கையை வட மாகாண ஆளுநர் அனுப்பி வைக்க வேண்டும் என விரும்புகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாழடைந்த கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக.25

யாழ்ப்பாணத்தில் பாழடைந்தகிணற்றுக்குள் இருந்து பெண்ணொருவரின்சடலம்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சித்தங்கேணி பகுதியிலுள்ள காணி ஒன்றிலுள்ள கிணற்றில் இருந்தே இந்தப் பெண்ணின் சடலம் நேற்றுக் காலைமீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் வீசிய துர்நாற்றத்தை அடுத்து அயலவர்களால் இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலம்நீரில் நனைந்து ஊதி காணப்படுவதுடன் அதில் ஈக்கள் மொய்த்த வண்ணமும் இருந்தது.

சடலம் நேற்று மதியம் வரை கிணற்றை விட்டு வெளியே எடுக்கப்பட்டு அடையாளம் காணப்படவில்லை.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் சுழிபுரம் பகுதியில் வீட்டைவிட்டு காணமாற் போயிருந்தவர் எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த பெண்ணுடையதாக இந்தச் சடலம் இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்தப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்கள் காணப்படுகின்றன எனவும், கிணற்றுக்கு அண்மையில் இழுத்துச் சென்றது போன்ற அடையாளங்கள் சம்பவ இடத்தில் தென்படுகின்றன எனவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (க)



# நம்பிக்கை இல்லாப் பிரேரணையை அரசு மீது கொண்டு வர மாட்டோம்!

## தி.மு.க. அறிவிப்பு

சென்னை.ஓக.25

எடப்பாடி பழனிசாமி அரசு மீது தி.மு.க. நம்பிக்கை இல்லாப் பிரேரணையை தி.மு.க. கொண்டு வராது என்று அதன் செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

டி.கே.எஸ். இளங்கோவன் எம்.பி. கூறியவை வருமாறு:-

தமிழகத்தில் தற்போது அசாதாரண சூழ்நிலை நிலவுகின்றது. ஆளும் தரப்பில் 19 எம்.எல்.ஏ.க்கள் இந்த ஆட்சி மீது நம்பிக்கை இல்லை என்று ஆளுநர் வித்யாசாகர் ராவைச் சந்தித்து மனு அளித்து இருக்கிறார்கள். இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டிய ஆளுநர் மராட்டியத்துக்குச் சென்று விட்டார்.

பா.ஜ.க. கட்டுப்பாட்டில் இருந்து, அவர்களின் உத்தரவைப் பெற்று ஆளுநர் செயற்படுகின்றார் போல் இருக்கின்றது. 19 எம்.எல்.ஏ.க்கள் கொடுத்த மனுவைத் தொடர்ந்து நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்த முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு அவர் உத்தரவிட்டு இருக்க வேண்டும். ஆனால் எந்த நடவடிக்கையும் அவர் எடுக்கவில்லை.



மாநிலங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக தி.மு.க. தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றது.

அந்த வகையில், தமிழக ஆளுநரின்செயல்பாட்டையும் மக்கள் மத்தியில் நாங்கள் எடுத்து செல்வோம்.

தற்போதைய சூழ்நிலையில் எடப்பாடி பழனிச்சாமி அரசு மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணையைத் தி.மு.க. கொண்டு வராது. நம்பிக்கை இல்லாப் பிரேரணையை மற்றவர்கள் கொண்டு வரும் பட்சத்தில், தி.மு.க. அப்போது உரிய முடிவை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



## பிரம்மபுத்திரா நதியில் புதிதாக அணைக்கட்டு

### இந்தியா முடிவு

புதுடில்லி.ஓக.25

வடகிழக்கு மாநிலங்கள் வழியாக பாயும் பிரம்மபுத்திரா நதியில் புதிய அணை கட்ட மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உமா பாரதி தெரிவித்துள்ளார்.

சீனாவில் உற்பத்தியாகி இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசம், அசாம் மாநிலங்கள் வழியாக வங்காள தேசம் சென்று கடலில் கலக்கும் பிரம்மபுத்திரா நதி, வடகிழக்கு மாநிலங்களின் பெரும்பான்மையானநீர்தேவையைப் பூர்த்தி செய்கிறது.

கனமழை நேரத்தில் நதியில் அதிகமான நீர் செல்லும் போது, போதிய அணைகள் இல்லாத காரணத்தால் அந்த நீர் வீணாகக் கடலில் சென்று கலக்கின்றது. சமீபத்தில் பிரம்மபுத்திரா நதியிலிருந்து இந்தஆண்டுக்குதேவையான நீரை அளிக்க முடியாது எனச் சீனா தெரிவித்து விட்டது.

இந்நிலையில், அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் செல்லும் பிரம்மபுத்திரா நதியில் புதிதாக அணை கட்டப்படும் எனவும், அதன் மூலம் மின் திட்டங்கள் உருவாக்கத்திட்டமிடப்பட்டுள்ளதாகவும் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உமாபாரதி தெரிவித்துள்ளார்.

## தன்னிடம் பேச மறுத்த பெண் கையை துண்டாக்கிய ஆசாமி

### உ.பி.யில் கொடூரம்

லக்னோ.ஓக.25

உத்தரப்பிரதேச மாநிலத்தில் தன்னிடம் பேச மறுத்த பெண்ணின் கையைக் கத்தியால் துண்டாக வெட்டிய ஆசாமியைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

உத்தரப்பிரதேசம் மாநிலம் லக்கிம்பூர் கேரிப் பகுதியில் உள்ள பதேபூர் சைத்ரி சந்தை எப்போதும் பரபரப்புடன் காணப்படும். அங்குள்ள கடையில் வேலை செய்து வருபவர் வினோத் சவுராஸ்யா. இவர் அதே பகுதியை சேர்ந்த 9 ஆம் வகுப்பு மாணவிக்குத் தொல்லை கொடுத்து வந்துள்ளார்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் மதியம் 3 மணிக்கு அந்த மாணவி சந்தைக்குவந்தார். அவரைக்கண்ட வினோத், அவரிடம் பேச முயன்றான். ஆனால், மாணவி அவரைக் கண்டு பயந்து ஒதுங்கினார்.

இதில் ஆத்திரம் அடைந்த அந்த ஆசாமி, அருகில் இருந்த கத்தியை எடுத்து மாணவியின் கையை வெட்டினான். இதில், அந்த மாணவியின் கை துண்டாகிக் கீழே விழுந்தது. மேலும், அவரது மற்றொரு கையையும் வெட்ட முயன்றார். ஆனால், அங்கிருந்த மக்கள் அவனை மடக்கிப் பிடித்தனர். அவனை உள்ளூர்ப் பொலிஸில் ஒப்படைத்தனர். இதுதொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில், கையில் வெட்டுப்பட்டு படுகாயம் அடைந்த மாணவி உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். உடல்நிலை குணமடைந்து வாக்குமூலம் தந்தால் தான் மேற்கொண்டு விசாரணை நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

### சொத்துக் குவிப்பு வழக்கு:

## சசிகலாவின் சீராய்வு மனு தள்ளுபடி

புதுடெல்லி.ஓக.25

சொத்துக் குவிப்பு வழக்கில் விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை எதிர்த்து, சசிகலா தாக்கல் செய்த சீராய்வு மனுவை உச்ச நீதிமன்றம்தள்ளுபடிசெய்துள்ளது.

சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், சசிகலா, அவரது உறவினர்கள் இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட 4 ஆண்டு சிறைத்தண்டனையை உறுதி செய்தது. இதையடுத்து அவர்கள் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டனர்.



இந்தச் சீராய்வு மனுக்கள் நீதிபதிகள் அமித்தவா ராய், எஸ்.ஏ. பாப்டே ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. நீதிமன்ற அறையில் விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கில் இன்னும் பல வாதங்களை முன்வைக்க வேண்டி இருப்பதால், நீதிபதி அறையில் இன்றி, நீதிமன்றத்தில் வழக்கை விசாரிக்க வேண்டும் என்று சசிகலா தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதையடுத்துத் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் தீர்ப்பளித்த நீதிபதிகள், சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோரின் சீராய்வு மனுக்களைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## பன்றிக்கறியைச் சாப்பிட்டு விவசாயிகள் போராட்டம்

புதுடில்லி.ஓக.25

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் டில்லியில் போராடி வருகின்றனர். 39ஆவது நாளான நேற்று முன்தினம் பன்றிக்கறி சாப்பிட்டு தமிழக விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள்.

மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தினம் ஒரு போராட்டத்தை கையில் எடுத்து இவர்கள் நடத்தி வருகின்றனர்.இந்த நிலையில் 39ஆவது நாளான நேற்று முன்தினம் தமிழக விவசாயிகள் பன்றிக்கறி சாப்பிடும் போராட்டம் நடத்தினர்.



கர்நாடக மாநிலத்தில் இருந்து காவிரி தண்ணீரை மத்திய அரசு தமிழகத்திற்கு பெற்றுத் தர மறுப்பதாகவும், உச்ச நீதிமன்ற உத்தரவான காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காமல் மத்திய அரசு காலம் தாழ்த்துவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

தமிழகத்திற்கு போதிய வறட்சி நிவாரணம் வழங்காமை, நதிகளை இணைத்து தண்ணீர் தராமை போன்ற துரோகங்களை மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து விளைவிக்கின்றன எனக் கூறிய விவசாயிகள் உண்ண உணவின்றி பன்றிக்கறி சாப்பிடும் நிலைமைக்குத் தாங்கள் ஆளாகி விட்டனர் எனவும் கூறினார்கள்.

மேலும் 'திங்க வச்சுட்டியே, திங்க வச்சுட்டியே, மோடியே தமிழக விவசாயிகளை பன்றிக்கறி திங்கவச்சுட்டியே' என்று கோஷங்களும் எழுப்பினர்.

இதில் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாக் கண்ணு தலைமையில் ஏராள மானவிவசாயிகள் பங்கேற்றனர். (ப)

# சீனா, கொங்கொங்கை தாக்கிய 'ஹாட்டோ' புயல்

பீஜிங்.ஓக.25

'ஹாட்டோ' புயலின் கடும் சீற்றத்துக்குச் சீனா மற்றும் கொங்கொங்கில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆசியாவின் பொருளாதார மையமாக விளங்கும் ஹொங் கொங் நகரை ஹாட்டோப் புயல் தாக்கியது. மணிக்கு 155 கிலோமீற்றர் வேகத்தில் தாக்கிய இந்தப் புயலால் கடல் அலைகள் சீற்றத்துடன், நகர வீதிகளுக்குள் பாய்ந்து மோதின.

வீதிகளில் போக்குவரத்து முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டது. மக்காவ் நகரில் புயலுக்கு 5 பேரும், ஹொங்கொங்கில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

ஹொங்கொங் விமான நிலையம் மூடப்பட்டு, சுமார் 450 விமானசேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஹாட்டோ புயலின் தாக்கம் மக்காவ் நகரையொட்டியுள்ள சீனாவின் தெற்குப் பகுதியிலுள்ள குவாங்டாங் மாகாணத்தையும் பதம் பார்த்தது.




13 பேர் உயிரிழப்பு



மக்காவ் நகரில் புயலில் சிக்கி ஒருவரும், அடுக்குமாடி குடியிருப்பின் 11ஆவது மாடியில் இருந்து தப்பி விழும்போது ஒருவரும், சாலையில் சென்ற லொறி மோதி ஒருவரும் பலியாகியுள்ளனர். மேலும், குவாங்டாங் நகரில் புயல் பாதிப்பால் 4 பேர் பலியாகினர்.

ஹாட்டோபுயல் தாக்கத்தைத் தொடர்ந்து, மீட்பு பணிகள் முழு வீச்சில் முடுக்கி விடப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் சிக்கியுள்ளவர்களை மீட்டு பாதுகாப்பான இடங்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்து மீட்புப்படை அதிகாரிகள் கூறுகையில்-

இதுவரை தற்காலிக நிவாரண முகாம்களில் 26,817 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சுமார் 664 ஏக்கர் விளைநிலங்கள் சேதமடைந்துள்ளன. மின்சார கம்பங்கள் அடியோடு சாய்ந்ததால் மின்சாரம் முழுவதும் துண்டிக்கப்பட்டுள்ளது.

புயலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் மீட்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளனர்.(ப)

## 11 பேர் தலை துண்டிப்பு: ஐ.எஸ். அட்டூழியம்!

லிபியா நாட்டின் சோதனை சாவடியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த 9 இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் இருவரின் தலையை ஐ.எஸ். தீவிரவாதிகள் துண்டித்துக் கொன்றுள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளில் மட்டுமல்லாது அரபு நாடுகள் பலவற்றிலும் ஐ.எஸ். தீவிரவாதிகள்காலூன்றிஇருக்கின்றார்கள். அதில் லிபியா நாடும் ஒன்று.

அங்குள்ள கடலோர மாவட்டங்களில் இவர்களின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. தலைநகர ரம்திரிபோலிக்குதெற்கே காலிபா கப்தார் என்ற இடம் உள்ளது. இங்கு இராணுவ சோதனை சாவடி செயற்பட்டு வருகிறது. இந்த சோதனை சாவடியில் இருந்த 9 பேருடைய தலையையும் அவர்கள் துண்டித்துக் கொன்றார்கள். மேலும் அங்கிருந்த பொதுமக்களில் 2 பேரையும் பிடித்து அவர்கள் தலையையும் வெட்டிக் கொடூரமாக் கொலை செய்துள்ளனர் என்று கூறப்பட்டது.

## சூடான் நீச்சல் குளத்தில் சடலமாக ரஷ்யத் தூதர்

கார்டோம்.ஓக.25

சூடான் நாட்டுக்கான ரஷ்யத் தூதர் மிர்கயாஸ் ஷிரின்ஸ்கிய் கார்டோம் நகரில் உள்ள தனது இல்லத்தில் இருக்கும் நீச்சல் குளத்தில் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

சூடான் நாட்டுக்கான ரஷ்யத் தூதராக இருப்பவர் மிர்கயாஸ் ஷிரின்ஸ்கிய். அந்நாட்டின் தலைநகர் கார்டோமில் உள்ள தனது இல்லத்தில் இருக்கும் நீச்சல் குளத்தில் அவர் சடலமாக மிதந்துள்ளார். உயர் இரத்த அழுத்தம் காரணமாக அவர் இயற்கையான முறையில் மரணமடைந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

## இத்தாலியில் நில நடுக்கம்



ஒருவர் சாவு; 25 பேர் காயம்

ரோம்.ஓக.25

இத்தாலி நாட்டுக்கு அருகே உள்ள சுற்றுலாத் தலமான இஸ்சியா தீவில் நேற்று முன்தினம் 4.0 ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதில் இடிபாடுகளில் சிக்கி ஒருவர் பலியானார்; 25 பேர் காயம் அடைந்துள்ளனர்.

இத்தாலியில் உள்ள இஸ்சியா தீவில் நேற்று முன்தினம் நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்குள்ள கடற்கரை நகரமான நேபில்ஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் குலுங்கின. இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

நில நடுக்கத்தில் இஸ்சியா தீவின் புராதன கிறிஸ்தவ தேவாலயம் உட்பட பல கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. கேசமிக்சி போலா நகரில் பெரும்பாலான கட்டிடங்கள் அடியோடு இடிந்து நாசமாகியுள்ளன. மீட்பு பணி நடைபெற்று வருகிறது.

## இந்தியா, பாகிஸ்தான் பேச்சு மூலம் பதற்றத்தைக் குறைக்க வேண்டும்!

அமெரிக்கா வலியுறுத்து



இந்தியா, பாகிஸ்தான் இடையே நிலவி வரும் பதற்றத்தை இருநாடுகளும் பேச்சு மூலம் குறைக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது.

ஜம்மு-காஷ்மீரில் உள்ள எல்லைப் பகுதியில் கடந்த சில மாதங்களாகவே பதற்றமான சூழல் நிலவி வருகின்றது. தீவிரவாதிகள் மற்றும் பாகிஸ்தான் இராணுவத்தினர் ஊடுருவல் சம்பவங்கள் அதிக அளவில் இடம் பெற்று வருகின்றன. ஊடுருவலுக்கு எதிராகப் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தீவிரவாதிகள் மற்றும் இராணுவ வீரர்கள் பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், இந்தியா, பாகிஸ்தான் இடையே நிலவி வரும் பதற்றத்தை இருநாடுகளும் பேச்சு மூலம் குறைக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார துறையின் செய்தி தொடர்பாளர் ஹீத்தர் நாவேர்ட் கூறுகையில், இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்து பேச்சு நடத்துவதை அமெரிக்கா ஊக்குவிக்கிறது.- என்றார்.

ஆப்கானிஸ்தான் நாட்டுடனான கொள்கை குறித்துப் பேசிய ட்ரம்ப் தீவிரவாத அமைப்புகளின் புகலிடமாக பாகிஸ்தான் திகழ்கின்றது எனக் கடுமையாக விமர்சித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

## பிரபல முகப்பவுடரால் புற்றுநோய்: ஆறாயிரம் கோடி ரூபா நஷ்டஈடு!

கலிபோர்னியா.ஓக.25

பிரபல நிறுவனத்தின் முகப் பவுடரைப் பயன்படுத்திய பெண்ணுக்கு புற்றுநோய்ப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து அந்தப் பெண்ணுக்கு சுமார் ஆறாயிரம் கோடி ரூபா நஷ்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவை சேர்ந்தவர் ஈவாளச்சல்வேலியா (வயது-63) இவர் கர்ப்பப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

தனக்குப் புற்றுநோய் ஏற்பட்டதற்குப் பிரபல நிறுவனத்தின் முகப்பவுடர் தான் காரணம் என்று குற்றம்சாட்டினார். இது தொடர்பாக அவர் கலிபோர்னியா நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அதில் நான் 11 வயதில் இருந்தே இந்த நிறுவனத்தின் முகபவுடரைப் பயன்படுத்தி வருகின்றேன். இதன் காரணமாக எனக்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த நிறுவனம் நஷ்டஈடு தர வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதுசம்பந்தமாக வழக்கு வந்தபோது, நீதிபதிகள் இந்த முகப்பவுடரைப் பயன்படுத்துவதால் புற்றுநோய் ஆபத்து இருக்கின்றது என்பது பவுடர் நிறுவனத்துக்குத் தெரியும். ஆனால், அதுபற்றிய குறிப்புகளை பவுடர் பக்கெட்டில் இடப்படவில்லை.



எனவே அந்தப் பெண்ணுக்கு 410 மில்லியன் டொலர் (சுமார் ஆறாயிரம்) நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று தீர்ப்புக் கூறினார்கள். இவ்வளவு பெரிய தொகையை அபராதமாக விதித்தது அந்த நிறுவனத்துக்குக் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சோர்வடையும் இலங்கை அணியை உற்சாகமூட்டும் முன்னாள் தலைவர்கள்

இளம் வீரர்களை அதிகமாகக் கொண்ட இலங்கை அணிக்கு அண்மைக்காலமாக இடம்பெற்ற உபாதைகள் மிகப் பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தின என ESPN cricinfo நிறுவனத்துடனான நேர்காணலில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அதிகமான இளம் வீரர்களைக் கொண்ட இலங்கை கிரிக்கெட் அணியினர் கடந்த சில நாள்களாக தொடர் தோல்விகளை அதிகம் சந்தித்து வருகின்றனர். இவ்வாறான ஒரு நிலையில், அணி மீதான அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன.

எனினும், இலங்கை அணியில் பிரகாசித்த முன்னாள் வீரர்கள் பலரும் இலங்கை அணிக்கு இந்த நேரத்தில் தமது ஆதரவை சாதகமான முறையில் வழங்க வேண்டும் என்பதையே தெரிவித்து வருகின்றனர்.



இலங்கை அணியை வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுக்க ரசிகர்களின் பங்களிப்பு மிக முக்கியம் என அண்மையில் முன்னாள் வீரர் குமார் சங்கக்கார கருத்துத் தெரிவித்திருந்தார். இந்நிலையில், தற்பொழுது மற்றொரு முன்னாள் வீரரும் அணித் தலைவருமான மஹேல ஜயவர்தனவும் இது குறித்துத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில் 'உலகின் முன்னணி அணியொன்றுக்கு எதிராக விளையாடுவதென்பது மிகச் சவாலான விடயம். இலங்கை அணி களத்தில் நிலைமைகளை முறையாகக் கையாளவில்லை என்றே கூறலாம். டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகள் இலங்கை அணியை வெகுவாகப் பாதித்தன.

"மேலும் எமது பந்து வீச்சாளர்களால் இந்திய அணி மீது போதியளவு அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியாமல் போனமையும் தோல்விக்குக் காரணமாகும்.

''துரதிஷ்டவசமாக வீரர்களின் உபாதைகள் இலங்கை அணிக்கு மிகப் பெரிய அழுத்தத்தைக் கொடுத்தது. அதிலும் குறிப்பாக நுவான் பிரதீப்பின் இழப்பு அணியின் நிலைமையை மோசமாக்கியது எனலாம். சந்தகன் சிறந்த சைனமன் பந்து வீச்சாளர், விஷ்வ பெர்னாண்டோ சிறந்த இடது கைப் பந்து வீச்சாளர். அவ்வாறாக இருந்தும் நேர்த்தியாக பந்து வீசுவதில் பிரச்சினை உள்ளது. இதற்குக் காரணம் போதிய அனுபவம் இன்மையே'' - என தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக விளையாடும் வீரராக குசல் மெண்டிஸைக் குறிப்பிட்ட மஹேல, ''மெண்டிஸ் கிரிக்கெட் பற்றித் தெரிந்த மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர். இளமையான அவர் விளையாடும் விதம் அற்புதமானது. ஒவ்வொரு நாளும் புதிதாக விடயங்களைக் கற்றுக்கொள்ளும் அவர் மீது, அவர் விடும் தவறுகளுக்காக தேவையில்லாத அழுத்தத்தை பிரயோகிக்கக் கூடாது'' என்று தெரிவித்தார்.

விராட் கோஹ்லி பற்றி கருத்துத் தெரிவித்த மஹேல, ''அவர் ஓர் உயிர்ப்பான அணித் தலைவர். நிலைமைகளை மிகச் சிறப்பாகக் கையாளும் ஒரு தலைவர். மைதானத்திலும் மைதானத்திற்கு வெளியேயும் அணியின் வெற்றிக்காக ஆக்ரோசமாகச் செயற்படும் ஒரு வீரர்.

அத்துடன் தலைவர் என்ற வகையில் அணியை முன்னின்று வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும் ஓர் அற்புதமான தலைவர் அவர் எனத் தெரிவித்துள்ளார். (ப)

## உலக பதினொருவர் தொடர் பாகிஸ்தானில்!



உலக பதினொருவர் அணி பங்குகொள்ளும் கிரிக்கெட் தொடர், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், பாகிஸ்தானின் லாகூர் நகரில் நடைபெறும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தொடரில் பங்குகொள்ளும் வீரர்களுக்கு, ஜனாதிபதிக்கு வழங்கப்படும் உயர் பாதுகாப்பு வழங்கப்படுமென, பஞ்சாப் மாநில அரசு உறுதிப்படுத்தியுள்ளதைத் தொடர்ந்தே, இத்தொடர் இறுதிசெய்யப்பட்டுள்ளது.

டெஸ்ட் விளையாடும் நாடுகளைச் சேர்ந்த 15 பேர் கொண்ட கிரிக்கெட் குழாமொன்று, பயிற்றுநர் அன்டி ஃபிளவரின் பயிற்றுவிப்பின் கீழ் செயற்படவுள்ளது. இவ்வாறு தெரிவு செய்யப்படும் குழாம், டுபாயில் 7 நாள்களுக்குப் பயிற்சியில் ஈடுபடும்.

அதன் பின்னர், செப்ரெம்பர் 10ஆம் திகதி முதல், 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு:20 தொடர் ஆரம்பிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.




## 2030 உதைபந்தாட்டம் ஆர்ஜென்டினா- உருகுவேயில்!

2030ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள, உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை நடத்துவதற்காக, உருகுவே, ஆர்ஜென்டினா ஆகிய 2 நாடுகளும் இணைந்து போட்டியிடவுள்ளன. இதற்கான அறிவிப்பை, உருகுவே ஜனாதிபதி வெளியிட்டார்.

இதற்கான உத்தியோகபூர்வமான அறிவிப்பு, அடுத்த வாரம் இடம்பெறவுள்ள நிகழ்வில் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தென்னமெரிக்க நாடுகளான இவ்விரண்டு நாடுகளும், இணைந்து உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்தி வந்த நிலையில், தற்போது இது அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னமெரிக்க நாடான பிரேஸிலில், 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணத்தை நடத்தியிருந்தது. 2018இல் ரஷ்யாவும் 2022இல் கட்டாரும், உலகக் கிண்ணத்தை நடத்தவுள்ளன. 2026இல், ஐ.அமெரிக்கா - மெக்ஸிக்கோ - கனடா ஆகிய 3 நாடுகள் இணைந்து நடத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 42 பந்துகளில் சதம் அடித்த அப்ரிடி

இங்கிலாந்து உள்ளூர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் அப்ரிடி 42 பந்துகளில் சதம் அடித்தார். இதில் 10 பவுண்டரிகளும், 7 சிக்ஸர்களும் அடங்கும்.

இங்கிலாந்தில் உள்ளூர் 20 ஓவர் போட்டியான நாட்வெஸ்ட் போட்டி தொடர் நடந்து வருகிறது. இதில் ஹாம்ப்ஷயர் அணியில் பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் அப்ரிடி விளையாடி வருகின்றார்.

இதில் நேற்று முன்தினம் நடந்த முதல் கால் இறுதியில் ஹாம்ப்ஷயர் - டெர்பைஷிரே அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாம்ப்ஷயர் அணியில் தொடக்க வீரராகக் களம் இறங்கிய அப்ரிடி 42 பந்துகளில் சதம் அடித்தார்.

அவரது ஆட்டத்தால் ஹாம்ப்ஷயர் அணி 20 ஓவரில் 8 விக் கெட்டுக்கு 249 ஓட்டங்களைக் குவித்தது. அடுத்து விளையாடிய டெர்பைஷிரே அணி 148 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது . இதனால் ஹாம்ப்ஷயேர் 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



காலைக்கதிர் Kalaikkathir



# மலிங்க பற்றி என்ன கூறுகிறார்கள்? நிக் போத்தாஸ் – விராட் கோஹ்லி



அண்மைய காலங்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தவறியிருக்கும் நட்சத்திர பந்து வீச்சாளர் லசித் மலிங்க பற்றி இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் நிக்போத்தாஸ் மற்றும் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி ஆகியோர்வெளிப்படையாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளனர்.

**நிக்போத்தாஸ்**

இந்த வருடம் அவரின் பந்து வீச்சு மூலம் ஏற்படுத்தப்பட்டிருந்த 9 பிடியெடுப்புக்கள் தவறவிடப்பட்டிருந்ததையும், அவர் ஒரு நாள் அணிக்கு நீண்ட கால ஓய்வின் பின்னர் திரும்பி 7 விக்கெட்டுகளை மாத்திரமே வீழ்த்தியிருந்தது பற்றியும் குறிப்பிட்டுக் காட்டியிருந்தார்.

நாங்கள் எங்களுக்கு உறுதுணையாக இருந்த போட்டியின் போக்கைத் தீர்மானிக்கக் கூடிய இலங்கை அணியின் முக்கிய வீரர்களைக் கடந்த



காலத்தில் இழந்து விட்டோம். அத்தோடு, தற்போது போட்டியின் போது தலைவர்களாக இருக்கக் கூடிய சில தலைவர்களையும் இழந்து விட்டோம். அவ்வாறாக ஒரு போட்டியின் போது தலைவராக இருக்க கூடிய வீரரே மலிங்க ஆவார். அவரால் பந்தை கொண்டு செய்யக்கூடிய விடயங்களையும் தற்போது நாம் பார்ப்பதில்லை. அத்தோடு, அவர் தற்போது அணியில் இருக்கும் இளம் பந்து வீச்சாளர்களுக்காக என்ன செய்திருக்கின்றார் என்பதையும் பார்ப்பதில்லை. அணியில் இருக்கும் ஏனைய ஒவ்வொரு வீரருக்கும் மலிங்க எவ்வளவு பெறுமதியான வீரர் என்பது தெரியும். அவரது அண்மைய பதிவுகள் அவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வைத்திருந்த பதிவுகள் போன்று சற்று திருப்திகரமானதாக அமையாது இருப்பினும், மலிங்கவின் பெறுமதி அளவிட முடியாத ஒன்றாகும்

- இப்படி நிக்போத்தாஸ் இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையில் நடைபெறவிருக்கும் இரண்டாவது ஒரு நாள் போட்டிக்கு முன்னரான ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

**விராட் கோஹ்லி**

33 வயதாகும் மலிங்கவின் அண்மைய ஆட்டங்களில் எதுவும் குறிப்பிட்டுச்சொல்லும்படி அமைந்திருக்காவிடினும், இலங்கை கிரிக்கெட் அணி மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில், கிரிக்கெட் உலகிற்கு அறிமுகம் செய்து வைத்த மிகச்சிறந்த வீரர்களில் அவரும் ஒருவராவார். வரலாற்றில் மலிங்கவால் மாத்திரமே ஒரு நாள் போட்டியொன்றில், (தென்னாபிரிக்க அணிக்கெதிராக 2007ஆம் ஆண்டு உலக கிண்ணத்தின் போது) தொடர்ச்சியாக நான்கு விக்கெட்டுகள் அடுத்தடுத்த பந்துகளில் கைப்பற்றப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மலிங்காவினாலேயே கடந்த காலங்களில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் இலங்கை அணி மிகவும் அச்சுறுத்தல் தரும் ஓர் அணியாக காணப்பட்டிருந்தது. அவர் விளையாடிய டெஸ்ட் போட்டிகளிலும், மிகவும் முக்கியமான ஒருவராகவே காணப்பட்டார். அவர் இப்போதைய காலங்களில் முன்னர் போன்று பந்து வீசுவது கிடையாது என இலகுவாகக் கூறினாலும், குறிப்பிட்ட காலத்திற்கே அவ்வாறு இருக்கப் போகின்றது.

அவரால், மீண்டும் துல்லியமான யோர்க்கர் பந்துகள் மூலமாகவும், அவரிற்கே உரிய பாணியிலான மெதுவான சில பந்துகளின் மூலமாகவும் மீண்டும் விக்கெட்டுகளை சீராக சாய்க்க முடியும் எனின், இந்தப் பேச்சுக்கு இடமே இருக்காது. மேலும் அவரது உடல் பற்றி என்னால் எதுவும் கூற முடியாது. அவரது உடல் பற்றி சரியாக அவருக்கு மாத்திரமே தெரியும். அவரோடு நாங்கள் எப்போதெல்



லாம் விளையோடுவோமோ, அப்போதெல்லாம் அவரது ஆற்றல்களுக்கு மதிப்பளிப்போம். அத்தோடு, போட்டியின் போக்கை திருப்ப அவர் எதைக்கொண்டு வருகின்றார் என்பதையும் அவதானித்துச் செயற்படுவோம். நாங்கள் எப்போதும், அவரோடு இப்படியாகவே விளையாடுவோம். கடந்த காலங்களிலும் அப்படியே விளையாடியிருந்தோம். அவர் இலங்கை அணிக்காக விளையாடும் வரை அப்படியே தொடர்ந்தும் விளையாடுவோம்.- என இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி மலிங்க பற்றித் தெரிவித்துள்ளார்.

**ஷிகர் தவான்**



2009ஆம் ஆண்டிலிருந்து, மலிங்கவும் கோஹ்லியும் 22 போட்டிகளில் ஒன்றாக விளையாடியுள்ளனர். இதில், ஒரேயொரு ஒரு நாள் போட்டியில் மாத்திரமே மலிங்கவினால் இந்திய அணியின் தலைவர் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டிருக்கின்றார். ஒரு சாதாரண துடுப்பாட்ட வீரராக அறியப்பட்டிருந்த கோஹ்லி இலங்கை அணிக்கெதிராகவே, அசுர ஆட்டத்தை வெளிக்காட்டி ஒரு சிறப்பான துடுப்பாட்ட வீரராக மாறியிருந்தார்.

சர்வதேச கிரிக்கெட்டின் அனைத்து வகைப் போட்டிகளிலும், இலங்கை அணிக்காக அவர் செய்த விடயங்களை நோக்கும் போது, ஒரு வரலாற்று நாயகனாக மலிங்க பார்க்கப்பட வேண்டியவர். அவருக்கு தற்போது கொஞ்சம் வயது போய் விட்டது. அவரது பந்து வீச்சுக்குரிய காலமும் போய்விட்டது. அதனாலேயே, அவரது பந்துவீச்சிற்கு துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக எதிர்தாக்குதல் தருகின்றனர் என நினைக்கின்றேன். இது இயற்கையான ஒரு விடயமே, ஏனெனில் போதிய அளவைவிட மலிங்க அதிமாக கிரிக்கெட் விளையாடி விட்டார். இது ஒரு சுழற்சிச் சக்கரம், வாழ்க்கையும் ஒரு சுழற்சிச் சக்கரம்

- மலிங்க இனி ஓய்வுபெற வேண்டும் என முதலாவது ஒரு நாள் போட்டியின் பின்னர் இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான் அறி வுரை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

# நெய்மர் மீது வழக்குத் தொடுப்பு



பரிஸ் சென் ஜேர்மா கழகத்துக்கு அண்மையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட, பிரேஸிலின் நெய்மர் மீது அவரது முன்னைய கழகமான பார்சிலோனா, வழக்குத் தாக்கல் செய்துள்ளது. ஒப்பந்த விதிகளை மீறினார் எனவும், அதற்காக 8.5 மில்லியன் யூரோக்களை அவர் செலுத்த வேண்டுமெனவும் பார்சிலோனா கோரியுள்ளது.

பார்சிலோனா கழகத்திலிருந்து விலகுவதற்கு 9 மாதங்கள் முன்னதாக, பார்சிலோனாவில் 5 ஆண்டுகள் நீடிப்பதற்கான புதிய ஒப்பந்தத்தில் நெய்மர் கைச்சாத்திட்ட போது, அவருக்கு வழங்கப்பட்ட மேலதிகக் கொடுப்பனவுகளை அவர் திரும்ப வழங்க வேண்டுமென, பார்சிலோனா கோரியுள்ளது.

இது தவிர, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தைத் தொடர்ந்து, மேலதிகமாக 10 சதவீதமான பணமும் வழங்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததுடன் ஸ்பெய்ன் உதைபந்தாட்டச் சம்மேளனத்திலும், முறைப்பாடொன்றை பார்சிலோனா பதிவுசெய்துள்ளது. குறித்த பணத்துக்குப் பொறுப்பேற்க நெய்மர் மறுத்துவிட்டால், அதற்கான பொறுப்பை ஆயின் பரிஸ் சென் ஜேர்மா கழகம் எடுக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, அறிக்கையொன்றை வெளியிட்ட நெய்மரின் பிரதிநிதிகள், இந்த அறிவிப்புத் தொடர்பில் ஆச்சரியமடைகின்றோம் எனத் தெரிவித்தனர். அத்தோடு, இவ் விடயத்தில் விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ளப் போவதில்லை எனவும் வழக்கை எதிர்த்துச் செயற்படப் போகின்றோம் எனவும் தெரிவித்துள்ளனர். (ப)

## வழக்கிற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஒரு வழக்குத் தொடர்பிலேயே நீதிபதி லியசேன ரணசிங்க இந்த உத்தரவை விடுத்தார்.

கொழும்பு பொரளை புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரியான ரங்கவடி தர்மராஜ என்பவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இவருக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்கினார் எனவும், ஆர்.டி.எஸ். வெடிமருந்து, 35 துப்பாக்கிரவைகள், சயனைட் வில்லைகள் என்பவற்றை உடைமையில் வைத்திருந்தார் எனவும் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி சட்டமா அதிபரினால் இந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையில் அரச தரப்பின் முக்கிய சாட்சியான பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எல்.ஏ. ரணசிங்கவிற்கு கடந்த 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடக்கம் கடந்த 7 வருடங்களாக நீதிமன்றில் ஆஜராகும்படி பல அழைப்பாணைகளை அனுப்பப்பட்ட போதிலும் அரச சாட்சி நீதிமன்றில் ஆஜராகவில்லை என எதிரியின் சட்டத்தரணி தவராசா நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

"பொலிஸ் அத்தியட்சகரான இந்த சாட்சி நிதிமோசடி வழக்கில் தொடர்புபட்டுள்ளார் எனப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையினால் நீதிமன்றில் ஆஜராக முடியவில்லை என முன்னர் கூறப்பட்டது. கடந்த சில வருடங்களாக சுகவீனம் காரணமாக நீதிமன்றிற்கு அவர் சமுகமளிக்கமுடியவில்லையென நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்கள் கூறப்படுகின்றன. இந்த சாட்சியின் நடவடிக்கைகள் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்பாடாகும்.

"கடந்த தவணை அரச தரப்பிற்கு இறுதித் தவணை வழங்கப்பட்டது. ஆனால் இப்போதும் இந்த அரசசாட்சி நீதிமன்றிற்கு சமுகமளிக்கவில்லை. இதனால் இந்த வழக்கின் எதிரி கடந்த 10 வருடங்களாக எந்தவித விசாரணையுமின்றி, விடுதலையுமின்றித் தொடர்ந்து விளக்கமறியலில் உள்ளார்.

''எனவே சட்டமா அதிபர் வழக்கை நடத்தி முடிக்க வேண்டும். அல்லது இந்த நீமன்றம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும்." - என அவர் தனது வாதத்தை முன் வைத்தார்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி அரசசாட்சியின் பொறுப்பற்ற போக்குக் குறித்துக் கடும் கண்டனம் வெளி யிட்டார்.

அரச சாட்சியான பயங்கரவாதத் தடைப்பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் எஸ். எல். ஏ. ரணசிங்கவைக் கைதுசெய்து நீதிமன்றில் பாரப்படுத்தும்படி நீதிபதி பிடியாணை பிறப்பித்தமையுடன் பிடியாணையை உடனடியாக செயற்படுத்தும்படி பொலிஸாருக்குக் கட்டளை இட்டு மேலதிக விசாரணையை ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

சட்டமா அதிபர் சார்பில் விராஜ் வீரசூரியவும் எதிரியின் சார்பில் சட்டத்தரணிகளான தர்மஜா தர்மராஜா, அனோமா பிரியதர்சினி ஆகியோரின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசாவும் ஆஜரானார்கள்.

## 20 ஆவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபை அதிகாரங்களை நாடாளுமன்றுக்கு வழங்குவதை இலக்காகக் கொண்டது என முதல்வர் விளக்கினார்.

இந்நிலையில், 20 ஆவது திருத்த சட்டமூலம் தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாட வேண்டும். அதன்படி, எதிர்வரும் 4 ஆம் திகதி மாகாண சபை உறுப்பினர்களுடன் கலந் துரையாடப் படவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, அரசமைப்பின் 20 ஆவது திருத்த சட்ட மூலத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு மறுக்கும் தீர்மானம் ஊவா மாகாண சபையில் நேற்று எடுக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கு முதலமைச்சரின் இந்த அறிவிப்பு மைத்திரி, ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த திருத்தச்சட்ட வரைவு, மாகாண சபைகளின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வட மத்திய மாகாணசபை செவ்வாயன்று இந்த திருத்தச்சட்ட வரைவுக்கு அங்கீகாரம் அளித்திருந்தது.

நேற்று ஊவா மாகாண சபையின் அனுமதிக்காக, இந்த திருத்தச்சட்ட வரைவு முன்வைக்கப்பட்டது. இது வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, 5 உறுப்பினர்கள் மாத்திரம் ஆதரவு அளித்தனர். 12 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். 8 உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. (உ)

## உயர்தர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 2ஆம் திகதி, முஸ்லிம்கள் ஹஜ் பெருநாள் தினத்தை கொண்டாடுவதால், அன்று இடம்பெறவிருந்த மேற்குறிப்பிட்ட பாடத்துக்கான பரீட்சையைப்பிற்போடுமாறு, அமைச்சர் ரிஷாத் பதியுதீன், எழுத்து மூலம் விடுத்த வேண்டுகோளை ஏற்றே, தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார் என அமைச்சர் அகிலவிராஜ் அறிவித்துள்ளார்.

## சுன்னாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் சுன்னாகம் ரயில்நிலையத்தை அண்மித்துக் கொண்டிருந்தபோதே ரயில் பாதையில் நின்ற இளைஞரை மோதியது எனக் கூறப்படுகின்றது. இதனால் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

மேற்படி குடும்பஸ்தர் கடந்த ஒன்றரை வருடத்திற்கு மேலாக மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து வாழ்கின்றார் எனவும் மனநலம் சற்றுப் பாதிக்கப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நபர் தற்கொலை செய்யும் நோக்கத்துடனேயே சுன்னாகம் ரயில் நிலையத்திற்குச் சென்றிருக்க வேண்டும் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் சுன்னாகம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து சடலம் நேற்று 9.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (ம)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் நீதி மன்றில் மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொக்சி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் டிலான் ரத்னாயக்கா, வசீம் தாஜுதீனின் காணாமல்போன உடல் பாகங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சமரசேகரா குற்றவாளி என அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றார்.

இந்த உடற்பாகங்களை தனியார் வைத்திய கல்லூரியான சைட்டத்துக்கு சமரசேகர வினால் எடுத்துச் செல்லப்பட்டன என்றார் அவர்.

அதனால், கிடைத்துள்ள சாட்சியங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வழிப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

இதனையடுத்து மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியில் இருந்து கைப்பற்றிய மனித உடற்கூறுகள் அடங்கிய 17 பொதிகளை கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு மேலதிக நீதிவான், குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டார். (உ)

## பேரறிவாளன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலூர் சிறைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தனது மகனுக்கு பரோல் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பேரறிவாளனின் தாயார் தொடர்ந்து பல போராட்டங்களை முன்னெடுத்து வந்தார். இதற்கு பல தரப்பிலிருந்தும் ஆதரவு கிடைத்தன.

இந்த கொலை வழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் பயாஸ், ஜெயகுமார், ரவிசந்திரன் ஆகிய 7 பேருக்கும் முதலில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

பேரறிவாளனுக்கு பரோல் கிடைத்தமை தொடர்பில் தனக்கு உத்தியோகப்பூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை, தனது மகன் வெளியில் வந்தால் மட்டுமே தான் நம்புவார் எனப் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தெரிவித்துள்ளார்.

## உணவகங்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாரம் மேற்படி உணவகங்கள் இரண்டும் நேற்றுப் பிற்பகல் 01.15 மணியளவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் சீல் வைக்கப்பட்டன.

மேற்படி உணவகங்களில் பழுதடைந்த உணவு கள் விற்பனை செய்யப்பட்டமை, அங்கு பணியாற்றியவர்கள் சுகாதார விதிமுறைகளுக்கு மாறான வகையில் செயற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத் துக்குப் பொறுப்பாகவுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையிலேயே மேற்படி உணவகங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, அண்மைக்காலமாக மேற்படி உணவகங்களில் விற்கப்படும் உணவுகளின் தரம் தொடர்பாக மாணவர்களால் விசனம் வெளியிடப்பட்டு வந்ததாகக் கூறப்பட்டது. (ம)

## ஐ.நாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் தமிழ் மக்கள் ஏமாந்திருப்பதால் சர்வதேசம் இனியும் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது, இந்த விடயத்தில் தலையிட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச நாடுகளின் தூதரகங்களுக்கும் ஐ.நா. பொதுச் செயலாளர் மற்றும் மனித உரிமைகள் ஆணையாளர் ஆகியோருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்தமை தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன.

ஆனால், தெற்கு ஆங்கில ஊடகங்களும் தமிழ் ஊடகங்களும் அந்தச் செய்திகளை வெளியிட்டமையில் பெரும் வேறுபாடுகள் உள்ளன.

தமிழ் ஊடகங்களில் வெளிவந்த செய்திகளில் -

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு வழங்கிய, புதிய அரசமைப்பு, காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை போன்ற வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லை. அரசு தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது. இதனால் சர்வதேசம் இனியும் பார்த்துக் கொண்டிருக்காமல் இந்த விடயத்தில் தலையிட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை தமிழ் பத்திரிகைகள் கடந்த 15 ஆம் திகதி தலைப்புச் செய்திகளாக வெளியிட்டிருந்தன.

ஆனால், ஆங்கில ஊடகங்களில் வெளிவந்த செய்திகளில் மீள்குடியேற்றம் தொடர்பாக, அதிலும் கேப்பாபிலவு விடுவிப்பு சம்பந்தமாகக் கூறப்பட்டிருந்தாலும், 13 ஆம் திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தே கூட்டமைப்பு சர்வதேச சமூகத்திற்குக் கடிதம் அனுப்பியதாகக் கூறப்பட்டுள்ளது.

13 ஆம் திருத்தச் சட்டமானது ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டது என்பதால் தமிழ் மக்கள் அதை நிராகரித்து வருகின்றனர். அதனால், அந்தச் சட்டத்தின் கீழான மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைக் கோருவதானது தமிழ் மக்களை முற்று முழுதாக ஏமாற்றும் நடவடிக்கை ஆகும். - என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனும் உடன் இருந்தார். (ம)

**ஆசிரியர் குறிப்பு**

மேற்படி கஜேந்திரகுமார் குறிப்பிடும் விடயம் 'காலைக்கதிர்' நாளிதழில் கடந்த 16 ஆம் திகதிய இதழில் முற்பக்கத்தில் 'கேப்பாபிலவுக் காணிகளைப் படையிடமிருந்து விடுவிக்க சர்வதேச அழுத்தத்தைக் கோருகின்றார் சம்பந்தன்' - என்றே பிரசுரமாகியிருந்தது.

கேப்பாபிலவு காணி மீளளிப்பு விடயம் தொடர்பாக இலங்கை அரசுத் தரப்புக்கும், சம்பந்தனுக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்களின் பிரதிகளை இணைத்து, அந்த விவகாரம் தொடர்பில் சர்வதேசத் தலையீட்டை சம்பந்தன் கோருகின்றார் என்ற கடிதம் அவரின் ஊடகச் செயலாளரால் சம்பந்தப்பட்ட சர்வதேசத் தரப்புகளுக்கு அனுப்பட்டதாகவே 'காலைக் கதிர்' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆ-ர்)

## பண்ணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் - நாவாந்துறையைச் சேர்ந்த குயின்ஸன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

மீட்கப்பட்ட இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அலை அடித்துச் சென்றதில் காணாமல்போன இருவரில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். மற்றவரைத் தேடும் பணி நேற்று மாலையிலும் தொடர்ந்தது. (உ)

## ரெலோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோ பரிந்துரைத்த விந்தனை நிராகரித்துவிட்டு, அக்கட்சியைச் சேர்ந்த குணசீலனுக்கு அமைச்சர் பதவியை முதல்வர் விக்னேஸ்வரன் வழங்கியமை தொடர்பில் முதல்வர் விக்னேஸ்வரன் தமக்கு எழுதியுள்ள பதில் ஏற்றுக் கொள்ள முடியாதது என்று 'காலைக் கதிர்' நாளிதழுக்குக் கருத்துச் சொன்னார் என்.ஸ்ரீகாந்தா.

இது தொடர்பில் அவர் நேற்றிரவு மேலும் கூறியவை வருமாறு:-

ஒரு கட்சி ஆட்சியில் முதல்வருக்கு இருக்கும் தற்றுணிவு அதிகாரம் வேறு. இது பல்வேறு கூட்டுக் கட்சிகளின் கூட்டமைப்பு அரசு. அதில் தனிக்கட்சி முதல்வர் மற்றைய கட்சிகளைக் கையாள்வதற்கு ஒரு முறைமை உண்டு. அத்தகைய விடயத்தில் அவரின் தற்றுணிவு அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டது. அதை அவர் உணரவேண்டும்.

இன்று தேசிய அரசியலிலும் அது நடக்கின்றது. இத்தகைய அமைச்சர் நியமன விட யத்தில் அங்கேயே தாம் எப்படிச் செயற்பட முடியும், செயற்பட வேண்டும் என்பதற்கு உதாரணங்களையும் நடைமுறைகளையும் முதல்வர் பார்த்து, படித்து அறிந்துகொள்ள முடியும்.

நாம் சுகாதார அமைச்சைக் கோரவேயில்லை. கட்சியின் பரிந்துரையைக் கட்சியின் பொதுச் செயலாளரான நானும், உபதலைவரான ஹென்றி மகேந்திரனும் நேரடியாக முதல்வரைச் சந்தித்தும் தெரிவித்தோம். அச்சமயம் டெனீஸ்வரனின் வசம் உள்ள அமைச்சையே அப்படியே விந்தனுக்கு வழங்கும்படி கோரினோம். அவரும் சம்மதம் தெரிவித்திருந்தார்.

கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற எமது கட்சியின் தலைமைக்குழுக் கூட்டத்திலும் இது குறித்து விரிவாக விவாதித்தோம். சுகாதார அமைச்சுப் பதவியைத் தந்தாலும் நாங்கள் அதனை ஏற்பதேயில்லை என்றும் தலைமைக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்தோம். அந்த முடிவு எடுக்கப்பட்டபோது குணசீலனும் கூட்டத்தில் இருந்தார்.

இப்போது கட்சி முடிவை மீறி, கட்சிக் கட்டுப்பாட்டைத் துறந்து, முதல்வர் கொடுத்ததும் ஓடிச் சென்று அவர் கையேந்தியமை மிகத் தவறாகும்.

கட்சி ஒழுங்கு விதியை மீறிய விவகாரத்தில் டெனீஸ்வரனுக்கு ஓர் அளவுகோலும், குணசீலனுக்கு ஓர் அளவு கோலும் கிடையாது.

குணசீலன் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். நான் நாளை (வெள்ளியன்று) மருத்துவ

பக்கம் 03

# யாழ்.போதனா வைத்தியசாலையின் குப்பைத் தொட்டிகளைக் காணவில்லை!


யாழ்ப்பாணம், ஓக. 25

டெங்கு நோய் பரவுவதைத் தடுக்கும் வகையில் யாழ்ப்பாணம் - போதனா வைத்தியசாலையின் வெளிச் சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்துவதற்காக யாழ். போதனா வைத்தியசாலையால் உருவாக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டிகளை மாநகரசபை இரவோடு இரவாக அகற்றியுள்ளது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் வைத்தியசாலையைச் சூழவுள்ள வீதிகளிலும் கழிவுநீர் வாய்க்கால்களிலும் தேங்கியுள்ள குப்பைகளை மாநகரசபை அகற்றுவதில்லை எனவும், இது தொடர்பாக தாம் வடமாகாண ஆளுநருக்கு முறைப்பாடு செய்யவுள்ளனர் எனவும் யாழ்.போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித் துள்ளார்.







நாட்டில் தற்போது டெங்கு நோயின் தாக்கமானது அதிகரித்துள்ள நிலையில், டெங்கு நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வைத்தியசாலையில் டெங்கு நோயாளிகள் உள்ள போது வைத்தியசாலை உட்புறச் சூழலிலும் வைத்திய சாலையின் வெளிப்புறச் சூழலிலும் டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய சந்தர்ப்பங்களை இல்லாது செய்ய வேண்டும்.

இதற்கென வைத்தியசாலையின் உட்புறப் பகுதிகளில் டெங்கு நுளம்பு உருவாகுவதைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும், வைத்தியசாலையின்வெளிப்புறத்தில்குறிப்பாக வைத்தியசாலையைச் சுற்றியுள்ள வீதிகளிலும் கழிவுநீர் வாய்க்கால்களிலும் டெங்கு நுளம்பு பரவுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக, யாழ்.மாநகர சபைக்கு சொந்தமான இந்த வீதிகளில் உள்ள வியாபார நிலையங்களிலிருந்து வீசப்படும் பொலித்தீன் கழிவுகள் வீதிகளில் தேங்கியுள்ளன.

இவை கழிவுநீர் வாய்க்கால்களிலும் அடைத்துள்ளன. இவற்றை மாநகரசபை அகற்ற வேண்டும். ஆனால் மாநகரசபை அவ்வாறு செய்வதில்லை என்றும் அவர் சாடியுள்ளார்.

# அதிவேக வீதியில் விபத்து: ஒருவர் பலி; 6 பேர் காயம்!



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வெலிப்பன்ன - குருந்துகஹாஹெத்த மவுக்கு இடையில் 55.4 எல் மைல் கல்லிற்கருகில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பெரிய வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து மாத்தறைக்கு சென்றுகொண்டிருந்த வான் ஒன்று அதே திசையில் சென்று கொண்டிருந்த லொறியொன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது, வான் சாரதிக்கு வாகனத்தை கட்டுபடுத்த முடியாமல் லொறியுடன் மோதிய நிலையில் இந்த வான் வீதியை விட்டு விலகி பாதுகாப்பு வேலியையும் உடைத்துக் கொண்டு பள்ளத்தில் பாய்ந்துள்ளது.

இந்த விபத்தில் வானின் சாரதி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். 6 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டு வருகிறோம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் பொரலெஸ்வத்த அக்குரஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஹேவதேவ பன்துல எனத் தெரியவந்துள்ளது.

# இலங்கை மக்களுக்கு மீண்டும் இந்திய வீடுகள்!

கொழும்பு, ஓக. 25

இலங்கையில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறுகின்ற 600 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொடுப்பதற்கு தேவையான நிதியுதவியை வழங்க இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.







இந்த தகவலை வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

'செமட செவன கிராமிய சக்தி' முன்மாதிரிக் கிராம வேலைத்திட்டத்தின் கீழ் இதனை செயற்படுத்துவது தொடர்பில், அமைச்சர் சஜித் பிரேமதாஸ சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் இந்திய அரசிடம் 30 கோடி ரூபா தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கும், இந்த நிதியைப் பயன்படுத்தி 25 மாவட்டங்களிலும் உள்ள மிகக் குறைந்த வருமானம் பெறுகின்ற 600 குடும்பங்களை இலக்காகக் கொண்டு வீடமைப்பு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

# இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தால் கருத்தரங்கு!

கொழும்பு, ஓக. 25

காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்களின் நிலையை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை ஓகஸ்ட் 30 ஆம் திகதியை காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நாளாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், காணாமல்ஆக்கப்பட்டோருக்கான தினத் தன்று (ஆகஸ்ட் 30) நாடுகடந்த தமிழீழ அரசால் கருத்தரங்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கருத்தரங்கு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கனேடிய அரசு, இத்தகைய நாடுகள் மீது, அதிலும் குறிப்பாக இலங்கை அரசின் மீது அழுத்தம் கொடுக்கும் வகையில் நடத்தப்பட உள்ளது.




இந்தக் கருத்தரங்கு ஆகஸ்ட் 30 ஆம் திகதி மாலை6.30மணியளவில் Delta Hotel, 2036 Kennedy Rd ( Kennedy/401) எனும் இடத்தில் நடைபெறும். இதில் பல வல் லுனர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற தகவல் இன்றி அதற்கான பதிலை அரசிடமிருந்து எதிர்பார்த்து பல நூற்றுக்கணக்கான உறவுகள் மாதக் கணக்கில் போராட்டங்களை தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்க வடமராட்சி வடக்கில் நடமாடும் சேவை

## ஞாயிறன்று தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலையில்

பருத்தித்துறை, ஓக. 25

குறைவான வசதிகளையுடைய மக்களுக்கான சட்ட ஆவணங்களை பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவை, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்தநடமாடும்சேவை மூலம் பின்வரும் விடயங்கள் தொடர்பாக மக்களுக்கான சேவைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது:-

★ இலவசமாக பிறப்ப், இறப்பு, திருமண பதிவு சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளல்.

★ பிறப்பு, இறப்பு, திருமண பதிவுச் சான்றிதழ் களில் திருத்தங்கள் மேற் கொள்ளல்.

★ இலவசமாக சான்றிதழ்கள்மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்து வழங்கல்.

★ இலவசமாக சட்ட ரீதியான திருமணப் பதிவு மேற்கொள்ளல்.

★ தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கான துணை ஆவணங்களை பெற்றுத் தருவதோடு ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்ளல்.

★ EPF, ETF தொடர்பான ஆலோசனை வழங்கலும் அதன் மூலம் கடன் பெற்றுக்கொள்ளல் தொடர்பான ஆலோசனை வழங்கல்.

★ சட்ட உதவி ஆணைக் குழுவின் ஆலோசனை பெற்று வழங்கல்.

★ வரிப்பணம் மற்றும் வாடகைப் பிரச்சினை தீர்வு.

★ அடிப்படை உரிமை, மனித உரிமைகளிற்கான தீர்வு.

★ ஓய்வூதியப் பிரச்சினைகளுக்கான தீர்வு.

★ நீர், மின்சாரம் போன்றவற்றுக்கான தீர்வு.

★ அரசகாணிப் பிணக்குகளுக்கான தீர்வு.

★ கமநல சேவைப் பிரச்சினைகளுக்கான தீர்வு.

-வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி இத்தகவலைவெளியிட்டுள்ளார்.

(உ)

## மகாதேவா ஆசிரம சுவாமிகள் ஜீவசமாதி



கிளிநொச்சி, ஓக. 25

கிளிநொச்சி, ஜெயந்தி நகர் ஸ்ரீ மகாதேவா ஆசிரமத்தின் பீடாதிபதி தவத்திரு ஸ்ரீமத் கணேசானந்தா மகாதேவ சுவாமிகள் நேற்று முற்பகல் 11 மணிக்கு ஜீவசமாதி அடைந்தார்.

அவரது மகா சமாதிக் கிரியைகள் இன்று காலை 10 மணி முதல் 11.30 மணி வரை ஆசிரமத்தில் நடைபெறும்.

ஆசிரமத்தில் அவரின் குரு தவத்திரு ஸ்ரீமத் வடிவேலு சுவாமிகளின் சமாதிக்குப் பக்கத்தில் அவரது சமாதி அமையும். (உ)

# அரசியல் கைதிகளை விரைந்து நிபந்தனையின்றி விடுவிக்குக!

## ஸ்ரீரெலோவின் செந்தூரன் கோரிக்கை




சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனை யின்றி விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் ஸ்ரீரெலோ இயக்கத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். செந்தூரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு தரப்பினரும் பல போராட்டங்களை முன்னெடுத்து வந்த நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை மந்தகதியில் இடம்பெற்று வருகின்றது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில், அவ்வழக்குகளை கொழும்பு நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுவதை எதிர்த்து அரசியல் கைதிகள் மூவர் அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளார்கள்.

அரசியல் கைதிகள் தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருக்கின்றமையும், தமிழ் தலைமைகளின் வாக்குறுதிகளை நம்பி உண்ணாவிரதத்தைக் கைவிடுகின்றமையும் வழக்கமாகிவிட்டது.

நல்லாட்சி அரசாங்கம் இந்தக் கைதிகளை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளை மிக விரைவில் முன்னெடுத்து, இந்த விவகாரத்தில் உறுதியும், இறுதியுமான முடிவுகளை வழங்க வேண்டும். – என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




## முன்னாள் சிப்பாய் கைது

களுத்துறை–பலாதொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றை நேற்றுச் சுற்றிவளைத்த விசேட அதிரடிப் படையினர் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரை கைது செய்துள்ளனர். அவரிடம் இருந்து 5 இராணுவ சீருடைகள், ரி56 ரக துப்பாக்கி மற்றும் 12 தோட்டாக்கள், 2 புலிப்பற்கள், வேறு ஒருவருக்கு சொந்தமான இராணுவ அடையாள அட்டை என்பவற்றை அதிரடிப்படையினர் கைப்பற்றினர்.

## ஊடகவியலாளர் செயலமர்வு




'சமயங்களின் ஊடாக நல்லிணக்கம் காணல்' என்ற தொனிப்பொருளில் தேசிய சமாதானப்பேரவை ஏற்பாடு செய்த ஊடகவியளாளர்களுக்கான பன்மைத் துவம். 'உள்வாங்குதல்' தேசிய அடையாளத்தை வெளிப்படுத்தல் தொடர்பான இரண்டு நாள் செயலமர்வு முல்லைத்தீவில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்றும் முன்தினமும் இடம்பெற்ற இந்த செயலமர்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்

# வறட்சி நிவாரணத்தில் பாரபட்சம் எனக் கூறி வவுனியா தவசிக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்!





வவுனியா, ஓக. 25

வவுனியா கந்தபுரம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட தவசிக்குளம் கிராம மக்கள் தங்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது என தெரிவித்து கிராம அலுவலர் அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்றுக் காலை 10.30 மணிக்கு போராட்டம் நடத்தினர்.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தவசிக்குளம் கிராமத்தில் 756 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், வெறும் 40 குடும்பங்களுக்கு மாத்திரமே வறட்சி நிவாரணம் வழங்கப்படுகிறது என்றும் அத்தெரிவில் கூட மோசடி இடம்பெற்றுள்ளது என்றும் கிராமத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் தெரிவித்து மக்கள் கிராம அலுவலர் அலுவலகத்திற்கு முன்னால் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கிராம அலுவலரை மாற்று, கிராம அபிவிருத்திச் சங்க தலைவரை மாற்று எனவும் கோஷமெழுப்பினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தவை வருமாறு:–

வறட்சி நிவாரணத் தெரிவானது மக்களுக்கு அறிவித்து சுயாதீனமாக நடைபெறவில்லை. தனிப்பட்ட ரீதியில் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன. கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் விருப்பபடியே தெரிவு இடம்பெற்றுள்ளது. வறட்சி நிவாரணத்திற்கு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் எனக்கூறப்படும் 40 பேரில் கூலிவேலை செய்பவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

மக்களின் குற்றச்சாட்டுக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி பதிலளிக்கையில் –

வவுனியா பிரதேச செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வறட்சி நிவாரணம் தொடர்பில் பயிர்கள் செய்து அழிவடைந்தவர்களின் விவரங்களை கமக்கார அமைப்பினூடாகத் தெரிவு செய்து கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலகத்திற்கு வழங்கியிருந்தோம்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். – என தெரிவித்தார். (க–100)

# உரும்பிராய் வாள்வெட்டு; 3 சந்தேக நபர்கள் கைது!

யாழ். உரும்பிராய்ச் சந்தியில் செவ்வாய் இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் தொடர்புபட்டவர்கள் எனக் கருதப்படும் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் யாழ். உரும்பிராய்ச் சந்தியிலுள்ள சிகையலங்கரிப்பு நிலையத்தில் பணியாற்றும் இளைஞர் ஒருவனை கொடூரமாக வாளால் வெட்டியுள்ளமையுடன் சிகையலங்கரிப்பு நிலையத்தையும் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவத்தின் போது அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரையும் அச்சுறுத்தி விட்டுச் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனக்கூறப்பட்டது.

இந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த இளைஞனிடம் கோப்பாய்ப் பொலிஸார் சம்பவம் தொடர்பான வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

இளைஞனின் வாக்குமூலத்திற்கமைய நேற்று முன்தினம் மூவரைக் கைது செய்த கோப்பாய்ப் பொலிஸார், அவர்களைப் பொலிஸ் காவலில் தடுத்து வைத்துத் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## விசேட தேவைக்கு உட்பட்ட சிறுவனுக்கு வவுனியா வர்த்தகர்களினால் வீடு



வவுனியாவில் வர்த்தகர்களின் நிதிப்பங்களிப்புடன் விசேட தேவைக்குட்பட்ட சிறுவனுக்கு வீடு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா – மாமடுவ கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட நெடுங்குளம் கிராமத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் பொலிஸாரின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீடு விசேட தேவைக்குட்பட்ட நிலூச லக்மால் (வயது 15) என்ற சிறுவனின் தாயாரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

வவுனியா வியாபாரிகளின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட வீட்டை வன்னி மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் திறந்து வைத்து உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

சிறுவனின் உடல்நிலை தொடர்பாக கேட்டறிந்த பிரதிபொலிஸ் மா அதிபர் வர்த்தகர்களால் விசேட தேவக்குட்பட்ட சிறுவனுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொதி ஒன்றையும் அந்தச் சிறுவனின் தாயாரிடம் கையளித்தார்.

பிரதிபொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இந்த வீட்டை நிர்மாணிப்பதற்கு நிதி உதவிகளை வழங்கிய வர்த்தகர்களுக்கு நினைவுப் பரிசில்களை வழங்கி கௌரவித்தார். (உ–100)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.